Vijey விஜய்

# விஜய்

27.11.2013 - மலர் 10, இதழ் 39

PUBLIC LIBRARY

# 'பிக் பென்' மணிக்கூட்டில் நேர மாற்றம்



NATARAJ

அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில்
சைக்கிள், லெப்டொப், டீஷேர்ட்,
கைக்கடிகாரம் மேலும் பல பரிசுகள்...

வனவிலங்கியல் பூங்கா சுற்றுலாப் பங்களாவில் இரண்டு தினங்கள் தங்குவதற்கான வாய்ப்பு

Smartphone வெல்லுங்கள்...

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

ISSN 1391-9504

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெகுசன தொடர்பு சாதனங்களின் இயல்புகள்




வெகுசன தொடர்புக்கு, ஊடகங்கள் அல்லது கருவிகள் என்பன மிக அடிப்படையாகின்றன. வெகுசன தொடர்பு உருவாக்கங்களுக்கு அடிப்படையானதாக அச்சுக்கலை அறிமுகமும் அதனைத்தொடர்ந்து அறிமுகம் செய்யப்பட்ட அச்சு ஊடகங்கள் மிக அடிப்படையானதாக அமைகின்றன. பின்னர் வானொலி, தொலைக்காட்சி, சினிமா, நவீன ஊடகங்கள் என விரிவு பட்டமையை அவதானிக்க முடிகின்றது.




இவ் ஊடகங்கள் ஒவ்வொன்றின் உருவாக்க அடிப்படைப் பின்னணிகள், செயன்முறைகள், பயனுறுதித்தன்மை போன்ற காரணிகளின் அடிப்படையில் அவற்றின் தனித்துவமான தன்மைகள் தீர்மானிக்கப்படுவதை இனங் காணக்கூடியதாக உள்ளன.

## அச்சு ஊடக இயல்புகள்

பொதுசன தொடர்பாடல் வகையில் இடம்பெறுகின்ற தொடர்பாடல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுகின்ற சாதனங்களில் அச்சு ஊடக சாதனங்கள் முதன்மையான நிலையில் உள்ளடக்கப்படுகின்றன. பரந்தளவு அதாவது, பெருந்திரளான மக்கள் கூட்டத்துடனான தொடர்புகளுக்கு அச்சுப்பதிப்பின் வழிமூலமாக உருவாக்கப்படுகின்ற பத்திரிகை, செய்திமடல், புத்தகங்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள், கையேடுகள் போன்றவற்றின் ஊடாக தகவல்கள் பரிமாற்றப்படுகின்ற, தொடர்புகள் ஏற்படுத்தப்படுகின்ற தன்மையினை அவதானிக்க முடிகின்றது. எழுத்து, மொழி, கட்புல தொடர்பாடல் வடிவத்தில் உபயோகிக்கப்படுகின்ற செயன்முறை இடம்பெறுகின்றது. அச்சுக்கலை வளர்ச்சிகள் அச்சு ஊடக பரவுகைக்கு உந்து சக்திகளாகின்றன.

* அச்சு ஊடகங்களை நுகர்வோருக்கு அடிப்படை மொழியறிவு அவசியமானதாகின்றது.
* அச்சு ஊடகங்களை நுகர்வதை தீர்மானிப்பவர் வாசகர்கள்.
* இலகுவாகக் கொண்டு சென்று எங்கும் நுகரக்கூடிய தொடர்பு சாதன வகையாகும்.
* அச்சு ஊடகத்திற்கு மிக அடிப்படையாக அமைவது எழுத்தாற்றல் ஆகும்.
* தொழில்நுட்பம் மற்றும் கடதாசியின் தரம், தகவல் உள்ளடக்கத்தில் தாக்கத்தை அல்லது பாதிப்பை உருவாக்காத தன்மைகளை அவதானிக்க முடிகின்றது.
* திட்டமிடல், வடிவமைப்பு, புகைப்படக்கலை, படைப்பாற்றல் கலை போன்றன ஒன்றிணைந்த வகையில் முன்னெடுக்கப்படுகின்ற செயன்முறையை கொண்டமைந்தது.
* வாசகர்களின் படைப்பாற்றல் வளத்தை வளப்படுத்தக்கூடிய ஊடகம்.
* அச்சு சாதனங்கள் மீண்டும் மீண்டும் விரும்பிய நேரங்களில் பயன்படுத்தக்கூடிய ஊடகங்களாகும்.





* தொழில்நுட்பத்திறன், படைப்பாற்றல் திறன், சமூகத்திறன், முகாமைத்துவத்திறன் அம்சங்களுடன் அச்சு ஊடகத்திறன்கள் உள்ளடக்கப்படுகின்ற ஊடகமாக காணப்படுகின்றது.
* ஆவணமாக பயன்படுத்தக் கூடிய இலகுவான சாதனமாக காணப்படுதல் போன்ற அம்சங்கள் அச்சு ஊடகங்களின் பொதுவான இயல்பு நிலைகளாக அமைகின்றன.

(தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

## தளிர்கரம்



வித்தியாசமான உருவிற்கு நிறந்தீட்டுக.



சிறிய உருவைச் சுற்றி வட்டமும் பெரிய உருவிற்குக் கீழ் கோடும் வரைக.



பிராணிகளின் உணவைக் கண்டுபிடியுங்கள்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

இலக்கங்களை அறிவோம்.

| | |
|---|---|
| 3 | 4 |
| 6 | |
| 4 | |
| 7 | |
| 5 | |

| | |
|---|---|
| 1 | 2 |
| | 8 |
| | 3 |
| | 9 |
| | 7 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பிக் பென் மணிக்கூட்டில் கடினமானதொரு பணி!

விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk

இங்கிலாந்தின் லண்டன் நகரின் பிரசித்திபெற்ற கட்டடமாகப் பிக் பென் மணிக்கூட்டுக் கோபுரம் உள்ளது. அதில் பொருத்தப்பட்டுள்ள விசாலமான மணியையே 'பிக் பென்' என்ற பெயரால் அழைக்கின்றனர். இந்த மணியின் காரணமாகவே, இந்த மணிக்கூட்டுக் கோபுரமும் பிக் பென் என்று அழைக்கப்படுகின்றது. குறித்த மணிக்கூட்டினைத் தாங்கி நிற்கும் கட்டடத்திற்கு Clock Tower என்று பெயர். எனினும், கடந்த ஆண்டு முதல் (2012 ஆம் ஆண்டு) இது 'எலிசபெத் டவர்' என்று பெயர் மாற்றம் பெற்றது. இந்த மணிக்கூட்டுக் கோபுரமானது, 96 மீற்றர் உயரம் கொண்டது. லண்டன் நகருக்கு நேரத்தைத் தெரிவிக்கும் மணிக்கூடாகவே இது திகழ்கின்றது.

இந்த மணிக்கூட்டின் பராமரிப்புப் பணிக்கெனப் பலர் இருக்கின்றனர். இவர்கள் அண்மையில் இதில் கடினமானதொரு பணியினை மேற்கொண்டிருந்தனர். அதாவது, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்த மணிக்கூட்டில் காட்டப்பட்ட கோடைகால நேரத்திற்குப் பதிலாக, அந்த நேரத்தை கிறீன்விச் நேரத்திற்கு மாற்றியதே இந்தக் கடினமான பணியாகும். மேற்கத்தேய நாடுகளில் ஒவ்வொரு பருவகாலத்திற்கும் ஏற்ப, நேரத்தில் மாற்றத்தினை ஏற்படுத்துவது வழமையான நிகழ்வாகும். எமது நாட்டிலும் இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெற்றது உங்களுக்கு நினைவிருக்கும்.

பிக் பென்னில் நேரத்தினைத் திரும்பவும் மாற்றும் வேலைத்திட்டத்தில் ஐந்து குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டன. இரவு 9.45 மணிக்கு இந்தப் பணி ஆரம்பமானது. சுமார் ஐந்து மணித்தியாலங்கள் இதற்குத் தேவைப்பட்டன. மறுநாள் விடியற்காலை 2 மணி வரை மணிக்கூடு இயங்கவில்லை. பிக் பென் நேர மாற்றத்துடன், இங்கிலாந்தின் நாடாளுமன்றத்தில் உள்ள ஏனைய மணிக்கூடுகளும் கிறீன்விச் நேரத்திற்கு மாற்றப்பட்டன.


பிரசித்திபெற்ற பிக் பென் மணியானது (bell), 1858 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது. தற்போது அதன் வயது 154 ஆண்டுகளாகும். அத்துடன், பதின்மூன்றரைத் தொன் நிறையைக் கொண்டது. கிழக்கு லண்டனில் தயாரிக்கப்பட்ட இந்த மணி, குதிரை வண்டிகளால் இழுத்து வரப்பட்டுத்தான் இவ்விடத்திற்குக் கொண்டு வரப்பட்டது. 1859 ஆம் ஆண்டு மே மாதமே குறித்த கோபுரத்தில் இந்த மணி பொருத்தப்பட்டது. 1859 ஜூலை 11 ஆம் திகதி முதலாவது மணி அடித்தது.அப்போது அதன் ஒலி முழுப் பிரதேசத்தையும் சென்றடைந்தது.

பிக் பென் மணிக்கூட்டினைப் பராமரித்து வருகின்றவர்களில் முன்னோடி நபராக முன்னாள் ராணுவ வீரர் இயன் வெஸ்ட்வர்த் பணியாற்றுகின்றார். 59 வயதான இவர், கடந்த 09 வருடங்களாக 334 படிகளைக் கடந்து சென்று பிக் பென் மணிக்கூட்டினைப் பராமரிக்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றார். இதன்போது, 14.5 அடியைக் கொண்ட ஊசலின் (Pendulum) சுழற்சியையும் கண்காணிக்க வேண்டும். சற்று பிசகினாலும் செக்கன் கணக்கில் நேரமாற்றம் ஏற்படும். இதன்படி, இந்த மணிக்கூட்டினைப் பராமரிப்பது என்பது இலகுவான காரியமன்று என்று இயன் வெஸ்ட்வர்த் கூறுகின்றார். பல ஆண்டுகள் பழமையானாலும் பிக் பென் மணிக்கூடு துல்லியமாகவே வேலை செய்கின்றது. அதில் உள்ள கருவிகள் பார்ப்பவர்களை வியப்பில் ஆழ்த்துகின்றன. இந்த மணிக்கூடு மேலும் 150 ஆண்டுகளுக்கு எந்தவிதமான பாதிப்பும் இன்றி இயங்கும் என்று இயன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

1859 இல் முதன்முதலில் ஒலியெழுப்பிய இந்த மணிக்கூடு, 154 ஆண்டுகளாக லண்டன் வாழ் மக்களுக்கு நேரத்தை அறிவித்துக்கொண்டிருக்கின்றது. எனினும், முதலாவது உலகப் போரின்போது ஜேர்மன் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகக்கூடும் என்ற அச்சத்தினால் இரண்டு ஆண்டுகள் இது மூடி வைக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போர் காலத்திலும் இந்த மணிக்கூடு நன்கு செயலாற்றியுள்ளது. ஆனால், 1941 மே மாதம் விழுந்த ஜேர்மனியக் குண்டுகளினால் சிறிய பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், டிஜிட்டல் கடிகாரம், ஸ்மார்ட் கடிகாரம் வந்த பின்பும் பிக் பென் மணிக்கூட்டின் மவுசு குறையவில்லை. இன்றும் லண்டன் மாநகருக்கும் இங்கிலாந்துக்கும் சரியான நேரத்தை பிக் பென் தான் தெரியப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

- கவீதா







விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
DIPLOMA IN ENGLISH கிலாஸ் போகாமலே இங்லீஸ் படிக்கலாம்.
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
மேலதிக விபரங்களுக்கு
முழுப்பெயர் ,முகவரியைக் குறிப்பிட்டு 0773- 123 523 க்கு SMS செய்யுங்கள்.
மேலதிக விபரங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
@- 10 பாடத்தொகுதிகள் தமிழ் விளக்கத்துடன்
@- ஆங்கில பேச்சுப்பயிற்சி / உரையாடல் வீடியோ சீடி 4 நான்கு
@- Video CD வழிகாட்டி புத்தகம் ஒன்று.
@- அழகிய கைக்கடிகாரம் ( Watch ) ஒன்று./ மாணவர் அடையாள அட்டை
@- 2014 ஆம் ஆண்டு வர்ண கலண்டர் ஒன்று இலவசம்.
@- Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன வழங்கப்படும்.
பாடநெறிக்கட்டணம். ரூபா 1800/- மாத்திரம் அறவிடப்படும். மாற்றுக்கட்டணம் இல்லை.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 081-222 77 11 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாளுடன் நரகாசுரன்

மிகவும் பெரிய சிலைதான். அந்தச் சிலை, காண்பவரை நடுங்கச் செய்துவிடும். கோழைகளான அந்தச் சேவகர்கள் அலறியடித்து ஓடியதில் அதிசயமில்லை. நீல நிறப் பூக்களின் வெளிச்சத்தில் சிலை உயிர் பெற்று பாய்ந்து வருவது போல் அமைச்சருக்கு மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. நரகாசுரன் வெறும் சிலைதான் என்பதை உணர்ந்துகொண்டதும் தனது பயத்தை வெளிக் காட்டாமல், "அதுசரி உடை தைப்பதாகச் சொன்னீர்களே! எங்கே இங்கே ஒன்றையும் காண வில்லையே. தைத்த உடையை கொஞ்சம் காண்பியுங்கள்" என்று கேட்டார்.

அதைக்கேட்ட குள்ளன் கீச்சுக் குரலில் ஏதோ பெயர் சொல்லி அழைத்தான். பொந்து போன்ற இடைவெளிக்குள்ளிருந்து நெட்டையன் ஒட்டகச் சிவிங்கியைப் போல் கிடுகிடு வென ஓடிவந்தான். அவன் எதையோ தூக்கிக்கொண்டு வருவது போலிருந்தது. குள்ளன் வேகமாக முன்னே நகர்ந்து நெட்டையன் கையிலிருக்கும் பொருளைத் தாங்கிக்கொண்டான்.



# மாயாஜால உடை

05 கே. விஜயன்

தொடர்கதை

"மகாப் பிரபு! இதுதான் நாங்கள் தைத்து முடித்த உடை" என்று நெட்டையனும் குள்ளனும் ஒரே நேரத்தில் சொன்னார்கள். அவர்கள் தாங்கிக்கொண்டிருந்த பொருளை அமைச்சர் உற்றுப் பார்த்தார். நெஞ்சு பகீரென்றது. ஏனென்றால், அவர்கள் கைகளில் ஒன்றுமே இல்லை. கண்களை கசக்கியவாறு பார்த்தார். உம் ஒன்றுமே இல்லை.

"என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்பதற்கு வாயைத் திறக்க நினைத்தார். அப்பொழுது, 'அதிசயப் புடவைகள் எல்லோர் கண்களுக்கும் தெரியாது' என்ற சேவகனின் வார்த்தைகள் அமைச்சரின் செவிகளில் ஒலித்தன.

'அடடா! என்ன சங்கடம். நான், என் கண்களுக்கு புடைவை தெரியவில்லை என்று சொல்லிவிட்டால், அதைக்கேட்கும் இந்த சேவகர்கள் என்னை முட்டாள் என்றல்லவா நினைப்பார்கள். பின்னர் நம் கதி என்னாவது? யாரும் நம்மை மதிக்கமாட் டார்கள்' என்ற பயம் அவரை பிடித்துக் கொண்டது.

அமைச்சரின் கண்கள் சேவகர்களை அளந்தன. அவர்களுக்கும் எதுவும் தெரியவில்லை. அதனால், பேய் முழி முழித்துக்கொண்டிருந் தார்கள்.

"ஓ! இந்தப் பயல்களின் கண்களுக்கும் ஒன்றும் தெரியவில்லையாக்கும்" அவருக்குப் பரம திருப்தியாக இருந்தது.

"அரண்மனையில் ஒருவனும் புத்திசாலியாகவோ, ஒழுங்காக வேலைசெய்பவனாகவோ இல்லை!" என்று மனதிற்குள் கரித்துக்கொண்டார். சேவகர்களில் பெரிய முழிகளைக்கொண்ட ஒருவன் இருந்தான். அவன் தந்திரக்கார அமைச்சரின் மனதில் என்ன எண்ணம் ஓடுகிறது என்பதை, தெரிந்துகொண்டான். அவன் திடீரெனக் கத்தினான்.

"பிரமாதம்! பிரமாதம்!"

அவனுடைய கத்தல் காதில் விழுந்ததோ, இல்லையோ தலையைச் சொறிந்தவாறு கோட்டான் போல் கண்களை முழுசிக்கொண்டிருந்த சேவகர்கள் அனைவரும் விழுந் தடித்துக்கொண்டு, "பிரமாதம் பிரமாதம்" என்று கத்தினார்கள்.

நரகாசுரன் சிலையைக்கண்டு முதலில் வெளியில் ஓடியவர்களின் நோக்கம் என்ன என்பது அமைச்சருக்கு விளங்காமலா இருக்கும்!

'உன்னை அரண்மனையில் கவனித்துக்கொள்கிறேன்' என்று நினைத்துக்கொண்ட அவர் சட்டென கைகள் இரண்டையும் உயரத்தூக்கி "மகா பிரமாதம்! மகா பிரமாதம்!" என்று பூரிப்புடன் ஆசீர்வதிப்பது போல் உரத்த குரலில் கூறினார். புன்னகை நிறைந்த முகத்துடன், நெட்டையனையும் குள்ளனையும் நெருங்கினார்.

"நமது மன்னரின் பிறந்தநாள் வருகிறது. அன்று மாமன்னர் நகர் ஊர்வலம் செல்வார். அப்பொழுது அணிந்துகொள்ள இதே வர்ணப் புடைவையில் இதைவிட மேலதிகமான வேலைப்பாடுகளுடன் உடை தைத்துத் தரவேண்டும்"

"அது எங்கள் மகா பாக்கியம் மகாப் பிரபு. இன்றே ஆரம்பித்து விடுகிறோம் மகாப் பிரபு!" என்று கட்டையனும் நெட்டையனும் தலைகள் தரையில் மோதிக் கொள்வது போல் இரண்டாக வளைந்து குனிந்து பதில் சொன்னார்கள்.

(தொடரும்)

அன்று விஜயநகரப் பேரரசின் அவை கலைந்தது. அரசர் கிருஷ்ண தேவராயர் வெளியேறிக்கொண்டிருந்தார். ஏனைய உறுப்பினர்களும் பின்தொடர்ந்தனர். அப்போது அமைச்சர் தெனாலிராமனிடம் மெல்லிய குரலில், "தெனாலி... உனக்கோ வயதாகிவிட்டது. ஏன் நீ அரசரிடம் கேட்டு பணி ஓய்வு பெறக்கூடாது?" என்று கேட்டார்.

அது அரசரின் காதில் விழுந்துவிடவே, அரசர் சிரித்தவாறு, "தெனாலிராமா! வேண்டுமானால் சொல்... மகிழ்ச்சியோடு தருகிறேன்," என்றார்.

"அப்படியானால், சரி... ஆனால், ஒரு நிபந்தனை! எனக்குப் பதிலாக வரப்போகிறவரை நான்தான் சோதித்துத் தேர்வுசெய்து தருவேன்" என்றார் தெனாலிராமன்.

"அதற்கென்ன... அப்படியே செய்யலாம்...." என்று அரசர் ஏற்றுக்கொண்டார்.

"அப்படியானால், உங்கள் மோதிரத்தை என்னிடம் கொடுங் கள்" என்றார் தெனாலிராமன். ஏன்? எதற்கு? என்று அரசர் கேட்கவில்லை. கழற்றப் போனார். அதற்குள் முந்திக்கொண்டு, அமைச்சர் தன் மோதிரத்தைக் கழற்றிக்கொடுத்துவிட்டார். பெற்றுக்கொண்டே தெனாலிராமன், "அடுத்த வியாழக்கிழமை சோதனை... அதில், வெற்றி பெறுபவர் எனது பதவியைப் பெறுவார். நான் ஓய்வில் போய்விடுகிறேன்" என்றார். மோதிரத் தைப் பெற்றுக்கொண்ட தெனாலி, ஒரு சிறிய மர டப்பாவில் அதை வைத்து மூடி, அரண்மனையில் இருந்த யானை நீர்குடிக் கும் ஆழமான பெரிய தொட்டியினுள் அதைப் போட்டுவிட்டு, "யார் இதை எடுக்கிறாரோ, அவரே எனக்குப் பின் என் பதவிக்கு வரமுடியும்" என்றார்.

அடுத்த சில நாட்களில், பதவித் தேர்வுக்கு மனுச் செய்திருந்த இளைஞர்கள் அனைவரும் வந்து ஆழமான தொட்டியைப் பார்த்தனர். அப்போது தொட்டி முற்றிலும் வறண்டு போயிருந்தது. மோதிர டப்பா அடியில் கிடந்தது. அதனுள் எப்படி இறங்கி அதை எடுப்பது? அனைவரும் பல்வேறு உபாயங்களைச் செய்து பார்த்தனர். எவராலும் எடுக்க முடியவில்லை.



# பதவி

அதற்குள் தெனாலிராமன் மீது பல குற்றச்சாட்டுகள் எழுந்தன. அமைச்சர், அவர் காதில் விழும்படியாகவே, "தெனாலிராமன் அந்த மோதிரத்தைத்தானே அபகரித்துக்கொள்ளச் செய்யும் தந்திரம் இது.... இல்லா விட்டால், அவரே அதை வெளியில் எடுத்துக் காட்டட்டுமே!" என்றார்.

அதைக்கேட்டதும், தெனாலிராமன் நேராக அரண்மனைக்குச் சென்றார். அரசர் ஒவ்வொரு வருடமும் ஹோலிப் பண்டிகையின்போது அந்த யானைத் தொட்டியில்தான் வண்ணநீரை நிரப்புவது வழக்கம். அதற்கு நீர் நிரப்பவும் வடி கட்டவும் தனித்தனிக் குழாய்கள் உள்ளன. தெனாலி சென்று நீர் நிரப்பும் குழாயைத் திறந்துவிட்டார். தொட்டியில் நீர் நிரம்பவே, அடியில் கிடந்த சிறிய மர டப்பா நீரில் மிதந்து மேலே வந்துவிட்டது. அதை எடுத்துத் திறந்து மோதிரத்தை அரசர் கையில் ஒப்படைத்துவிட்டார். அரசரிடமிருந்து அது அமைச்சரைப் போய் சேர்ந்துவிட்டது.

மகிழ்ச்சி அடைந்த அரசர் கிருஷ்ண தேவராயர், "மோதிரத்தை எடுத்துத் தருபவர்தான் உனக்குப் பிறகு உன் பதவிக்கு வர முடியும் எனறாய். இப்போது நீயே எடுத்துத் தந்து விட்டாய்... எனவே, உன் பதவி உன்னையே வந்தடைந்துவிட்டது. ஆகவே, உனக்கு ஓய்வு தருவது பற்றி இனி நான் எண்ணிக்கூடப் பார்க்க முடியாது" என்றார். அமைச்சர் வெட்கித் தலைகுனிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லோயஸ் மண்ணின் ரகசியம்



வடட சீனாவின் பாலைவன மணல் மற்றும் தூசுகளைக் கட்டுப்படுத்துவதில், பாரிய ஆறுகளின் அழுத்தங்கள், அதிகமாக இருப்பதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

லோயஸ் என்று அழைக்கப்படும் காற்றினால் அடித்துச் செல்லப்படும் மிகவும் பெறுமதியான தூசுகள், பரல்கள் பல வட சீனாவில் காணப்படுகின்றன. லோயஸ் மண் உருவாக்கும் தூசுகளின் பிறப்புக்கும் மண்ணுக்கும் இடையிலான தொடர்பு என்ன? என்று அண்மைக்காலம் வரை அறியப்படாமல் இருந்தது.

இதுபற்றி அறிவதற்காக ரோயல் ஹலொவின் பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்கள் சிலர் முயற்சித்தனர். காற்றினால் அடித்து வரப்படும் மிகவும் நுண்ணிய தூசுதுணிக்கைகள் சீனாவின் லோயஸ் மேட்டு நிலத்தில் சேர்ந்து மிகவும் கடினத் தன்மை கொண்ட மணல் தட்டுப்பகுதியினை உருவாக்கியுள்ளது. கடந்த 2.5 மில்லியன் ஆண்டுகளாக இந்த நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. இந்த ஆய்வின் ஒரு பகுதியாக ஆய்வாளர்கள் மொங்கோலியாவின் மீஉஸ் என்ற பாலைவனத்தைப் பற்றியும், உலகின் நீளமான ஆறுகளில் ஒன்றான மஞ்சள் நதி பற்றியும், இவற்றைச் சூழவுள்ள இதர ஆறுகள், பாலைவனங்கள் தொடர்பாகவும் ஆய்வுகளை மேற்கொண்டனர்.

மஞ்சள் ஆற்றில் இருந்து வட திபெத்தினூடாக மீஉஸ் பாலைவனத்திற்குப் பாரியளவில் மணல் அடித்து வரப்படுகின்றது. இதனூடாக லோயஸ் மணல் தட்டின் இருப்புக்கு மஞ்சள் நதி பெரும் பங்காற்றுகின்றது என்பது கண்டறியப்பட்டது.

காலநிலை மாற்றத்திற்கும், கடல் உற்பத்திகளுக்கும், மனிதர்களின் ஆரோக்கியத்திற்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் இந்தத் தூசுகள் உருவாகும் விதம் மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் என்பனவற்றை அறிந்துகொள்வது அவசியமாக உள்ளது. இந்த ஆய்வுகள் குறித்தான விபரங்கள் 'குவாட்டனரி சயன்ஸ் ரிவியூஸ்' என்ற சஞ்சிகையில் ஒக்டோபர் 14 ஆம் திகதி குறிப்பிடப்பட்டிருந்தது.

## விஜய் மாணவர் கழகம்



அங். இல: 5428

ப.பதிமிலன்,
குட்செட் வீதி,
வவுனியா.



அங். இல: 5429

த. அஹமட் ஹனாஸ்,
உபதபாலக வீதி,
அக்கரைப்பற்று-01.



அங். இல: 5430

என்.எம்.மின்ஹாஜ்,
எலமல்தெனிய,
முருதகஹமுல்ல.



அங். இல: 5431

க.ஹேஷினி,
V.C வீதி,
பழுகாமம்-01.



அங். இல: 5432

ஏ.சம்ஹான் பஸீல்,
சாஹிபு வீதி,
கல்முனை-05.



அங். இல: 5433

என்.எப்.நிஸ்லா,
பம்மன்ன,
நாரங்கொட.



அங். இல: 5434

பா.ஜதுஸ்ணவி,
பரிகாரி கண்டல்,
முருங்கன்.



அங். இல: 5435

ம.பியோசின்,
உடுவில்,
சுன்னாகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் ரம்சார் ஈரநிலங்கள்

பொதுவாக, நீர் சூழ்ந்த சுற்றாடல் தொகுதியினை 'ஈரநிலம்' என்று அழைப்பர். களப்பு, ஆறு, வாவி, ஏரி போன்ற நீர்நிலைகளையும் சதுப்புநிலம் போன்ற ஈரளிப்பான நிலப்பகுதிகளையும் உள்ளடக்கியதாகவே இந்த ஈரநிலங்கள் காணப்படுகின்றன. இலங்கையில் 6 இடங்கள் 'ரம்சார் ஈரநிலங்கள்' ஆக அறிவிக்கப்பட்டுள்ளன. அவை பற்றிச் சுருக்கமாக நோக்குவோம்.

1971 ஆம் ஆண்டு ஈரானின் ரம்சார் நகரில் ஈரநிலங்களைப் பாதுகாக்கவெனச் சர்வதேச உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதன்கீழ் உலகம் முழுவதும் உள்ள சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்கள் இனங்காணப்பட்டு, அவற்றைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த ஈரநிலங்களே 'ரம்சார் ஈரநிலங்கள்' எனப்படுகின்றன.

## ஆனவிழுந்தாவ வாவிகள் தொகுதி




வடமேல் மாகாணம்-புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஆனவிழுந்தாவ வாவிகள் தொகுதி 'ஆனவிழுந்தாவ சரணாலயம்' எனவும் அழைக்கப்படுகின்றது. 1397 ஹெக்டெயார் நிலப்பரப்பு வரை பரந்துள்ளது. நீர்கொழும்பில் இருந்து புத்தளம் வரையிலான ரயில் பாதையையும் நீர்கொழும்பு முதல் புத்தளம் வரையிலான கரையோரப் பகுதியையும் உள்ளடக்கியுள்ளது. 2001 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ரம்சார் ஈரநிலமாக இப்பகுதி பிரகடனப்படுத்தப்பட்டது.

ஆனவிழுந்தாவ ஈரநிலமானது, பல வாவிகளை உள்ளடக்கிய ஒரு பிரதேசமாகும். சுமார் 800 வருடங்களாக வயல்களுக்கு நீர்ப்பாசன வசதிகளை வழங்கிவரும் பகுதியாகவும் வெள்ளப்பெருக்கினைக் கட்டுப்படுத்தும் பிரதேசமாகவும் இந்த ஈரநிலம் முக்கியத்துவம் பெறுகின்றது.

பலதரப்பட்ட பறவைகள் மற்றும் ஈரூடகவாழிகள் வசிக்கும் ஈரநிலமாக இந்த நிலப்பகுதி விளங்குகின்றது. சுற்றுலாப் பறவைகள் மற்றும் உள்நாட்டுப் பறவைகளைப் பார்வையிடவும் அவற்றைப் புகைப்படம் எடுக்கவும் ஏற்ற இடமாக ஆனவிழுந்தாவ வாவிகள் தொகுதியைக் குறிப்பிடலாம். இலங்கையில் உள்ள நன்னீர் மீன் இனங்களில் 50 சதவீதமானவை ஆனவிழுந்தாவ வாவிகள் தொகுதியில் வசிக்கின்றன. இதனைத் தவிர, 22 நீரியல் தாவரங்கள் மற்றும் 264 வகையான பிற தாவரங்களும் இங்குள்ளன. அவற்றுள் மிகவும் பெறுமதியான மருத்துவ நலன்மிக்க தாவரங்களும் இலங்கைக்கே தனித்துவமான தாவரங்களும் உள்ளடங்குகின்றன. அத்துடன், பாலூட்டிகள் மற்றும் ஊர்வன என்பனவும் இங்கு வசிக்கின்றன.





## பூந்தல தேசிய வனவிலங்கியல் பூங்கா

1990, ஜூன் 15 ஆம் திகதி பூந்தல தேசிய வனவிலங்கியல் பூங்கா சர்வதேச முக்கியத்துவம் கொண்ட ஈரநிலமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த வனப்பகுதி தேசிய வனவிலங்கியல் பூங்காவாக 1993, ஜனவரி 4 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டது. ரம்சார் ஈரநிலமாக பிரகடனப்படுத்தப்பட்ட இலங்கையின் முதலாவது தேசிய வனமாகவும் இது கருதப்படுகின்றது.


6216 ஹெக்டெயார் நிலப் பிரதேசம் முழுவதும் பரவியுள்ள பூந்தல தேசிய வனவிலங்கியல் பூங்காவானது, தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ளது. ஹம்பாந்தோட்டை, திஸ்ஸ, வெலிகந்த, கிரிந்த பாதையில் கிரிந்த ஓயா முகத்துவாரம் வரையும் கிரிந்தி ஓயா முகத்துவாரம் பகுதியிலிருந்து ஹம்பாந்தோட்டை கரையோரப்பகுதி வரையும் பூந்தல வனப்பகுதி பரந்துள்ளது.

இங்கு அழகிய ஏரிகள் மற்றும் களப்புகள் என்பன அமைந்துள்ளன. பூந்தல களப்பு, எம்பிலிகல களப்பு, மஹாயேவாய மற்றும் கொஹொலங்கல களப்பு என்பன இவற்றுள் பிரதானமானவையாகும். அடர்ந்த காடுகளையும் இங்கு காணமுடியும்.

ஈரநிலமாக மட்டுமன்றி, பறவைகளின் சொர்க்கபுரியாகவும் பிரசித்தி பெற்றுள்ள இப்பகுதியில், உயிர்ப் பல்வகைத் தன்மை மிகவும் அதிகமாக உள்ளது. பூந்தல வனப்பகுதியை தமது வாசஸ்தலமாக்கிக்கொண்ட உயிரினங்களில் இலங்கைக்கே உரிய 11 பறவையினங்கள், 32 மீன் இனங்கள், 15 ஈரூடக வாழிகள், 48 ஊர்ந்து செல்லும் உயிரினங்கள், 197 பறவைகள், 52 பாலூட்டி இனங்கள் என்பன உள்ளடங்குகின்றன. சுற்றுலாக் காலங்களில் இங்கு உள்நாட்டு-வெளிநாட்டு பறவை இனங்கள் பலவற்றைப் பார்த்து ரசிக்க முடியும்.

## மாது கங்கை





2003, டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி மாது கங்கைக்குரிய 915 ஹெக்டெயார் நிலப்பரப்பு சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ரம்சார் ஈரநிலப் பகுதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. மாதுகங்கை ஈரநிலமானது, அதன் இரு மருங்குகளிலும் கண்டல் தாவரங்களால் சூழப்பட்டும் கங்கையின் நடுவில் அமைந்துள்ள 17 தீவுகளைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. சுற்றாடல் ரீதியிலும் உயிரியல் ரீதியிலும் முக்கியத்துவம் மிக்க ஈரநிலமாக மாது கங்கை திகழ்கின்றது. 95 தாவர குலத்திற்குரிய 303 உப இனங்களும் 248 உயிரினங்களும் மாது கங்கைப் பகுதியில் உள்ளன. அவற்றைத் தவிர; முதலைகள், மீன் இனங்கள், பறவைகள், பாலூட்டி இனங்கள் பலவும் இப்பகுதியில் உள்ளன. இலங்கையில் அசுத்தமடையாத கண்டல் தாவரங்கள் உள்ள பகுதியாக இப்பகுதியைக் கருதமுடியும். இந்த ஈரநிலப் பகுதியில் பாரம்பரிய மீன்பிடித் தொழிலிலும் கறுவாத் தொழிலிலும் ஈடுபடுகின்ற ஏராளமானோர் உள்ளனர். சுற்றுலாப் பயணிகளின் கவனத்தைப் பெருமளவில் ஈர்த்துள்ள மாது கங்கை ஈரநிலமானது, சூழலியலாளர்களின் மனதைப் பெரிதும் கவர்ந்த இடமாக உள்ளது.

(மிகுதி அடுத்த இதழில்)

-பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2014 உலக ஈரநில தினம் (பெப்ரவரி 02)



உலக ஈரநில தினத்தை முன்னிட்டு மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் ஈரநிலம் தொடர்பாக நடத்தப்படும் குறுக்கெழுத்துப் போட்டி.

வனஜீவிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் நடைபெறுகின்ற இப்போட்டிக்கு 'விஜய்' பத்திரிகை ஊடக அனுசரணை வழங்குகின்றது.

வாரம் தோறும், 10 சுற்றுச்சூழல் புத்தகப் பொதிகளை வெல்லும் வாய்ப்பு

**இறுதிப் போட்டியில் வெற்றியீட்டுபவர் தனது குடும்பத்தாருடன் தேசிய வனவிலங்கியல் பூங்காவொன்றின் சுற்றுலா பங்களாவில் இரண்டு நாட்களைக் கழிப்பதற்கான வாய்ப்பு.**

இறுதிப் போட்டியின்போது, ஐந்து வாரங்களில் கிடைக்கப்பெற்றுள்ள சகல குறுக்கெழுத்துப்போட்டிக் கூப்பன்களிலிருந்தும் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் 28 வெற்றியாளர்களுக்குப் பணப்பரிசும் வழங்கப்படும்.

- ★ *1 ஆம் இடம் - ரூபா 10,000*
- ★ *2 ஆம் இடம் - ரூபா 7,500*
- ★ *3 ஆம் இடம் - ரூபா 5,000*
- ★ *25 பேருக்கு தலா 2,500 ரூபா வீதம் ஆறுதல் பரிசுகள்*

**மேலிருந்து கீழ்**

01. ஈரநிலத் தாவரமான நீரல்லி, நீரில் இவ்வாறு படர்ந்து வளரக்கூடியது.
02. மன்னர் காலத்தில் நீர்ப்பாசனத் தேவைக்காகக் கட்டப்பட்டது.
03. சூரிய வெப்பம் காரணமாக நீர் இவ்வாறு மேலெழும்.
04. ஈரளிப்பான தரையில் படர்ந்து வளரும்.
05. நீர்நிலைகளை நாடி வரும் விலங்குகளைப் பதுங்கியிருந்து வேட்டையாடும் விலங்கினம்.
07. ஈரநில சூழலில் காணக்கூடிய அளவில் பெரிய பாலூட்டி. (தலைகீழ்)
08. நீர்நிலையொன்று.
10. காலைப்பொழுதில் ஈரநிலப்பகுதிகளில் பெய்யும். (தலைகீழ்)
11. ஈரநிலங்களில் காணக்கூடிய பூச்சி வகையொன்று. (தலைகீழ்)

**இடமிருந்து வலம்**

01. நீர்நிலைகளுக்கு அருகில் இப்பறவையைக் காணலாம்.
03. நீரிலும் நிலத்திலும் வாழும்.
04. ஈரநில சூழலில் காணக்கூடிய ஊர்வனமொன்று.
06. உலகில் குறைந்த மழைவீழ்ச்சியைப் பெறும் இடம் அமைந்துள்ள நாடு.
09. இலங்கையிலுள்ள ரம்சார் ஈரநிலமொன்று.

## 'ஈரநில' குறுக்கெழுத்துப் போட்டி 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | |
| | | | | | |
| | 4 பா | | 5 | | |
| | | | 6 | பி | 7 |
| 8 | | | | | |
| 9 வி | | 10 | | 11 | |

**குறுக்கெழுத்துப் போட்டியை நிரப்பி, இங்குள்ள கூப்பனுடன் தபாலட்டையில் ஒட்டி *04.12.2013* ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வையுங்கள்.**

தபாலிடும் முகவரி:

ஈரநில
குறுக்கெழுத்துப்
போட்டி-02
'விஜய்'
த.பெ.எண்-2037
கொழும்பு.

பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................
பாடசாலை : ..............................................
தொலைபேசி : ..............................................
நகரம் : ..............................................

# 2013, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



பர்ஹானா பர்ஸான், 83 புள்ளிகளைப் பெற்றுள்ளார். களு/அல்-பாஸியத்துல் நஸ்ரியா மு.ப.ம. வித்தியாலய மாணவியான இவர், பர்ஸான்-பரீனா தம்பதியரின் புதல்வியாவார்.



எஃப்.அகீலா, 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார். களு/அல்-பாஸியத்துல் நஸ்ரியா மு.ப.ம.வித்தியாலய மாணவியான இவர், அன்ஸார்-ரியாஸா தம்பதியரின் புதல்வியாவார்.



மாதிபொல, அறபா மு.ம.வித்தியாலய மாணவியான எஃப்.சிப்னாஸ், 127 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



மேவின் ஜெஸ்ரோன், 169 புள்ளிகளைப் பெற்றுள்ளார். க/கதிரேசன் மத்திய கல்லூரி மாணவனான இவர், ஒகஸ்டியன்-அருளோஜினி தம்பதியரின் புதல்வராவார்.



வவுனியா, சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலை மாணவனான கு. சுலக்ஷன், 185 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், குலதீபன்-வனீஸ்வரி தம்பதியரின் புதல்வராவார்.



பா.ஜதுஷ்ணவி, 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார். மன்/பரிகாரிகண்டல் அ.த.க.பாடசாலை மாணவியான இவர், பாலநேசன்-கவிதா தம்பதியரின் புதல்வியாவார்.



எம்.பஹீம், 123 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மாவ/ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவராவார்.



எம்.அப்ரார், 171 புள்ளிகளைப் பெற்றுள்ளார். மா/குரீவெல ஹமீதியா கல்லூரி மாணவனான இவர், முஸ்தபா-பர்ஸானா தம்பதியரின் புதல்வராவார்.



யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவனான தி.தனகஸ்தன், 170 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



கலேவெல, அர் ரஹ்மத் ஆரம்பப் பாடசாலை மாணவனான எம்.முஸான், 170 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், முஹீஸ்-ஹலீமுன்னிஸா தம்பதியரின் புதல்வராவார்.



கி.எப்சிபா, 149 புள்ளிகளைப் பெற்றுள்ளார். மன்/பரிகாரிகண்டல் அ.த.க.பாடசாலை மாணவியான இவர், கிறிஸ்ரி அன்ரன் - சகிலா தம்பதியரின் புதல்வியாவார்.



எம்.அப்கர், 137 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஹ/அல்-அமீர் முஸ்லிம் வித்தியாலய மாணவனாவார்.

## கு/அல்-இர்பான் மத்திய கல்லூரி



(இடமிருந்து வலமாக) எஃப்.அஸ்ரா (156 புள்ளிகள்), என்.ஹப்ஸா (156 புள்ளிகள்), ஆசிரியை எம்.ஐ.கமருன்னிஹார், அதிபர் ஏ.எச்.எம்.பஸார், ஆசிரியர் எம்.ஆர்.எம்.ரியாஸ், எஃப்.அப்கா (175 புள்ளிகள்), எஃப்.ஹனா (171 புள்ளிகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் (தரம் - 04)

பெயர்: ..................................................

★ கீழ்வரும் பந்தியை வாசித்து, கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

01) பூச்சி இனங்களில் வண்ணத்துப்பூச்சியும் ஒன்று. இதில் பல இனங்கள் காணப்படுகின்றன. அவை பல்வேறு, வர்ணங்களில் கண்ணைப் பறிப்பன. இவை விவசாயிக்கு நன்மை பயப்பன. பயிர்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன. வண்ணத்துப்பூச்சிகள் இலைகளின் அடிப்பகுதியில் முட்டையிடுகின்றன. இவை பொரித்து மயிர்க்கொட்டிகளாக உருவெடுத்து இலைகளை வெட்டி உண்கின்றன.

1. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பூச்சி யாது? ..........................................
2. இங்குள்ள உயர்திணைச் சொல் யாது? ..........................................
3. பந்தியிலுள்ள அஃறிணைச் சொல் ஒன்று தருக ..............................
4. வண்ணத்துப்பூச்சிகள் எங்கே முட்டையிடுகின்றன? ........................
5. மயிர்க்கொட்டிகள் எவற்றை உணவாகக் கொள்கின்றன? ................
6. நிகழ்கால வினைச்சொல் ஒன்று தருக? ..........................................
7. முட்டையிடும் என்பதைப் பிரித்தெழுதினால் ..................................
8. வர்ணங்கள் என்ற சொல்லிற்கு ஒத்தகருத்துச் சொல் தருக ................

02) கீழுள்ள சொற்களில் சரியாக எழுதப்பட்டுள்ள சொல்லின் கீழ்க் கீறிடுக.

1. முயர்ச்சி, முயச்சி, முயற்சி
2. வரட்சி, வறட்சி, வரச்சி
3. திரட்டு, திறட்டு, திறற்று
4. நிகல்ச்சி, நிகழ்ச்சி, நிகழ்சி
5. நீர்வீல்ச்சி, நீர்வீழ்ச்சி, நீர்வீழ்சி

03) எதிர்ப்பொருள் தரும் சொல்லைத் தருக

1. வரவு ................................
2. ................................ஏற்றம்
3. வாழ்வு ................................
4. ................................அந்தம்
5. இலாபம் ................................




04) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புக:

1. கழுதைக்குத் .......................... .......................... வாசனை.
2. அடம்பன் கொடியும் .......................... ..........................
3. கற்றது கைமண்ணளவு .......................... ..........................

05) தன்மை, முன்னிலை, படர்க்கை என்பவற்றை இனம் கண்டு இடைவெளியை நிரப்புக:

1. நான் உணவு உண்டேன் ..........................................
2. நீ எங்கு சென்றாய்? ..........................................
3. அவன் உடை வாங்கினான் ..........................................

06) பின்வரும் மரபுத்தொடர்களின் கருத்தை எழுதுக:

1. குரங்குப்பிடி ..........................................
2. கண்ணும் கருத்துமாய் ..........................................
3. நுனிப்புல் மேய்தல் ..........................................
4. பூசி மெழுகுதல் ..........................................
5. காது குத்துதல் ..........................................

07) கீழுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமாக நிறுத்தற்குறிகளை இடுக.

1. ஆகா எவ்வளவு பெரிய கட்டிடம்
2. உணவு வகைகளில் பழங்கள் காய்கறிகள் இறைச்சி வகைகள் முக்கியம் பெறுகின்றன
3. ஐயோ குழந்தை எங்கே

08) ‘இலங்கை ஒரு அழகிய தீவு’ (என்பதற்கான காரணங்களுடன்) ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

---


### கணிதம் தரம் - 4 விடைகள்

(நொவெம்பர் 20 ஆம் திகதி பிரசுரமானவை)

**பகுதி -I**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 05. | 1 | 09. | 2 | 13. | 1 | 17. | 2 |
| 02. | 2 | 06. | 3 | 10. | 1 | 14. | 3 | 18. | 2 |
| 03. | 2 | 07. | 2 | 11. | 1 | 15. | 2 | 19. | 1 |
| 04. | 1 | 08. | 2 | 12. | 3 | 16. | 2 | 20. | 2 |

**பகுதி -II**

01) 5856
02) 4536
03) 
04) 3700g
05) 500$cm^2$
06) 6m
07) 1730g
08) 6263
09) 8
10) 4
11) 5
12) ரூபா 3.00
13) 42 மணித்தியாலங்கள்
14) 10 நாட்கள்
15) 

### தமிழ் தரம் - 4 விடைகள்

01) 1. வண்ணத்துப்பூச்சி
2. விவசாயி
3. பூச்சி/இலைகள்/ முட்டை
4. இலைகளின் கீழ்ப் பகுதியில்
5. இலைகள்
6. காணப்படுகின்றன
7. முட்டை+இடும்
8. நிறங்கள்

02) 1. முயற்சி
2. வறட்சி
3. திரட்டு
4. நிகழ்ச்சி
5. நீர்வீழ்ச்சி

03) 1. செலவு
2. இறக்கம்
3. தாழ்வு
4. ஆதி
5. நட்டம்

04) 1. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை.
2. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
3. கற்றது கைமண்ணளவு கல்லாதது கடலளவு.

05) 1. தன்மை.
2. முன்னிலை.
3. படர்க்கை.

06) 1. பிடிவாதமாய் இருத்தல்.
2. முழுக் கவனத்துடன்.
3. மேலெழுந்த வாரியாக படித்தல்.
4. குற்றத்தை மறைத்தல்.
5. ஏமாற்றுதல்.

07) 1. ! .
2. , , , .
3. ! ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலதிகக் கற்றலின் அவசியம்





பாடசாலையிலும் பிரத்தியேக வகுப்புகளிலும் கல்வியைக் கற்றுக்கொள்ளும் மாணவர்களிடையே, ஏனைய வளங்களைப் பயன்படுத்தி, மேலதிக அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வமுடைய மாணவர்கள் ஒரு சிலரே காணப் படுகின்றனர். மாணவர்களைப் பொறுத்தவரையில், தாம் பெறும் கல்வியானது, பாடசாலை மற்றும் பிரத்தியேக வகுப்புக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருத்தலாகாது. அது பரந்துபட்டதாக இருக்க வேண்டும்.

ஒரு பகுதிக்குள் அல்லது பிரிவிற்குள் நின்று அறிவைத் தேடுவது என்பது, குறிப்பிட்ட துறையில் மட்டுமான அறிவையே கொடுக்கும். ஆனால், மேலதிகமாகக் கற்றுக்கொள்ள வேண்டும், தெரிந்துகொள்ள வேண்டும் என்ற தேடலுடனான மேலதிகக் கற்றலானது, அனைத்தையும் தெரிந்துகொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும். அத்துடன், ஒன்றைக் கற்க வேண்டும், அது தொடர்பில் மேலதிகமாத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் தேடலும் இல்லாத மாணவர், தனது கற்றலைக் குறிப்பிட்ட வட்டத்திற்குள்ளேயே செயற்படுத்தக் கூடியதாக இருக்கும்.



மேலதிக கற்றல் என்பது, நேரத்தை மேலதிகமாக எடுப்பதோ அல்லது நேரத்தை வீணடிப்பதோ என்று அர்த்தப்படுவதில்லை. அது நாம் பெற்ற அறிவு தொடர்பில் மேலதிகமாக விரிவாக்கம் செய்துகொள்வதாகவும் புதிய விடயங்களை அறிந்துகொள்ள உதவுவதாகவும் அமையும்.


பாடசாலை, பிரத்தியேக வகுப்புக்கள் என்பன போக; இணையம், தொலைக்காட்சி, பத்திரிகை, வானொலி, பிற நூல்கள் என்பன நமக்கு மேலதிக அறிவினை வழங்கக் கூடிய ஊடகங்களாகும். ஆனால், அவற்றைக் கல்விக்காக மட்டுமே பயன்படுத்துவது என்பது, மாணவர்களின் சுயகட்டுப்பாட்டிலேயே தங்கியுள்ளது.

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

# வியாழனைவிடப் பெரிய கோள்

பால்வீதியில் வியாழனை விடவும் மிகப் பெரிய கோள் ஒன்றை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

பால்வீதி மண்டலத்தில் நடைபெறும் மாற்றங்கள் குறித்தும் கோள்கள் உருவான விதம் குறித்தும் விண்வெளி ஆய்வாளர்கள் ஆராய்ச்சி செய்து





வருகின்றனர். இத்தகையதோர் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த போதே, முதன்முதலாக கடந்த 2011 ஆம் ஆண்டு புளூட்டோவுக்கு அப்பால் ஒரு கோள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கோள் பற்றி தொடர்ந்து ஆய்வில் ஈடுபட்டபோது, இந்தக் கோளானது, பூமியிலிருந்து 25 ஆயிரம் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளதெனவும் அது வியாழன் கோளைவிட எட்டு மடங்கு பெரியதாக இருக்கின்றது எனவும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதற்கு MOA - 2011 - BLG - 322 எனப் பெயரிட்டுள்ளனர்.




noolaham.org | aavanaham.org

# கண்டியை நோக்கிச் சென்ற படையணி

ஆங்கிலேயருக்கு உதவ கனிஷ்ட பிலிமத்தலாவையிடம் திறமை இருந்தது போலவே அவர்களுக்கு யுத்தத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான சினத்தை மூட்டுவதற்கும் எஹலப்பொலையிடம் சக்தி இருந்தது. இதற்கிடையில் புடைவை வியாபாரத்தை மேற்கொள்வதற்காகக் கண்டிக்குச் சென்ற ஆங்கில நிர்வாகப் பகுதிக்கு உட்பட்ட வர்த்தகர்கள் பத்துப்பேரின் கை, கால்கள் (அவயவங்கள்) வெட்டப்பட்ட கொடூர நிகழ்வொன்றும் கண்டியில் நடந்தது. அவர்களில் ஏழு பேர் அவ்விடத்திலேயே மரணமடைந்தனர். தமக்கு நிகழ்ந்த கதியை முறையிடுவதற்காக எஞ்சிய மூவரும் கொழும்பிற்கு வந்தனர்.

இவ் வர்த்தகர்கள் எஹலப்பொலையின் ஆட்கள் என்றும் அவர்கள் ஆங்கிலேயரின் உளவாளிகள் என்றும் நினைத்தே தண்டனை வழங்கப்பட்டதாகப் பின்னர் அறியக் கிடைத்தது. அது குறித்துக் காரண காரியங்களை விசாரிக்க வேண்டுமென ஆள்பதி எண்ணவில்லை. இந்தக் குரூரமான செயல் யுத்தத்தை மேற்கொள்வதற்குப் போதுமான காரணமாக அவர் எண்ணினார். அவர் யுத்தத்தை ஆரம்பிக்க ஆயத்தமானார். படைவீரர்களை அனுப்பும்படி இந்தியாவிற்குச் செய்தி அனுப்பினார். கண்டியைச் சுற்றி வளைக்க படை அணிகளை ஆயத்தப்படுத்தினார். கி.பி. 1804 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்து, பின் கைவிடப்பட்ட செயல்களை விடுத்து முறையான எட்டு அணிகளைக் கொண்ட பெருஞ்சேனையைத் திரட்டினார். கொழும்பிலும் திருகோணமலையிலும் இரு படையணிகளும்; அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, காலி, நீர்கொழும்பு ஆகிய இடங்களில் இருந்து தலா ஒரு படையணியுமாக கண்டியை நோக்கிச் செல்வதற்குத் திட்டமிடப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு உதவ நேசக்கரம் நீட்டுகிறது...

## Firefox

இணையப் பயனாளர்களுக்குப் பல விதங்களில் பயனுள்ளதாக இருக்கும் Firefox இணைய உலாவி, சூறாவளியால் பெரும் பாதிப்புக்கு இலக்காகி இருக்கும், பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு உதவும் வகையில், செஞ்சிலுவைச் சங்கத்துக்குக் கைகொடுக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.




நீங்கள் Firefox உலாவியைப் பயன்படுத்துபவர் என்றால், இந்தக் கோரிக்கையைக் கவனித்திருக்கலாம். Firefox உலாவியைப் பயன்படுத்தும்போது இது போன்ற செய்திகள் வழக்கமாகவே தோன்றுவதை நீங்கள் கவனித்திருக்கலாம். முகப்புப் பக்கத்தில் தேடல் கட்டத்தின் அருகே இந்தச் செய்திகளை Firefox பகிர்ந்துகொள்ளும்.

பொதுவாக Firefox முகப்புப் பகுதியில் Firefox தொடர்பான தகவல்களே இடம்பெறும். ஆனால், தற்போது பிலிப்பைன்ஸ் நாட்டில் பலத்த சூறாவளியால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், அங்கு களத்திலிருந்து உதவிகளைச் செய்துவரும் செஞ்சிலுவைச் சங்கத்துக்குக் கைகொடுத்து உதவுங்கள் எனும் பொதுநலக் கோரிக்கை முகப்புப் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது. '9 ஆண்டுகளாக எங்களை ஆதரித்து வருவதற்கு நன்றி. இப்போது பிலிப்பைன்ஸுக்கும் உதவுங்கள்' என்று தெரிவிக்கப்பட்டு அருகிலேயே செஞ்சிலுவைச் சங்கத் தளத்திற்கு இணைப்பும் தரப்பட்டுள்ளது. பொதுநலன் நோக்கிலும் Firefox இப்படியான உதவித்திட்டங்களுக்குக் கைகொடுத்து வருவது வரவேற்கத்தக்கது.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, நொவெம்பர் மாதம் 27 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# விஜய் நுட்பம்

எஸ்.பிரதீப்

2013, நொவெம்பர், 27, புதன்கிழமை

## செய்தி சொல்லும் புகைப்படம்






1956 செப்டெம்பர் இல் IBM நிறுவனம் தனது '305 RAMAC' என்ற பெயர்கொண்ட முதலாவது 'Super' கணினியை அறிமுகம் செய்தது. இது ஒரு ஹார்ட் டிஸ்க் (HDD) ஐயும் கொண்டிருந்தது. இந்த ஹார்ட்டிஸ்க்கின் எடை ஒரு தொன்னுக்கும் அதிகமாகும். இதில் சேமிக்கக்கூடிய தகவல்களின் அதிகபட்ச அளவு எவ்வளவு தெரியுமா? ஐந்தே ஐந்து MB தான்!

மைக்ரோசொஃப்ட் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட விண்டோஸ் இயங்குதளமானது, இவ்வருடம் நொவெம்பர் மாதம் 10 ஆம் திகதியுடன் 30 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளது.

விண்டோஸ் இயங்குதளத்தின் முதற்பதிப்பு 1983 ஆம் ஆண்டு நொவெம்பர் 10 ஆம் திகதி

## 30 வருடப் பூர்த்தியில் விண்டோஸ் இயங்குதளம்




மைக்ரோசொஃப்ட் நிறுவுனர் பில் கேட்ஸினால் வெளியிடப்பட்டது. அப்போது அது கட்டளைகள் மூலம் இயங்கக் கூடியதாகக் (Command Line Interface) காணப்பட்டது. 1985 ஆம் ஆண்டு நொவெம்பர் 20 ஆம் திகதியே, கிரஃபிக்ஸினை (Graphical User Interface) அடிப்படையாகக் கொண்ட இயங்குதளம் அறிமுகப்படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Bluetooth வசதியுடனான Portable Speaker கள்




Favi நிறுவனமானது, Bluetooth தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்டதும் இலகுவாக எடுத்துச் செல்லக் கூடியதுமான Speaker களை அறிமுகம் செய்துள்ளது.

Boomerang, Boomerang Mini

Bluetooth
NFC





என்ற இரண்டு வகைப் பதிப்புக்களாக இவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

வெள்ளை, கறுப்பு, மஞ்சள் எனும் மூவகை நிறங்களில் வடிவமைக்கப்பட்டுள்ள Boomerang Speaker ஆனது 7.83 x 8.2 x 2 அங்குல அளவு கொண்டதாகவும் 6W சக்தியினை வெளிவிடக்கூடியதாகவும் இருக்கிறது. இதன் அறிமுக விலை 79.99 டொலர்களாகும்.

இதேவேளை, Boomerang Mini ஆனது, 4W சக்தியினை வெளிவிடக்கூடியதாகவும் 5.91 x 6.12 x 1.49 அங்குல அளவுடையதாகவும் காணப்படுகின்றது. இதன் அறிமுக

colors:

விலை 59.99 டொலர்களாகும்.

இவற்றின் வடிவமும் இலகுவான பயன்பாட்டுத் தன்மையும் பயனாளர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுத்தரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



12



# மின்னஞ்சலில் வரும் இணைப்புக் கோப்புக்களை நேரடியாக Google Drive இல் சேமிக்கலாம்!

மின்னஞ்சல் பயன்பாட்டை மேலும் எளிமையாக்கும் புதிய வசதியை Google நிறுவனம் Gmail இல் அறிமுகம் செய்துள்ளது. இந்த வசதியின் மூலம் மின்னஞ்சலில் வரும் இணைப்புக்களை Google Drive இல் நேரடியாகச் சேமித்துக் கொள்ளலாம்.

பெரிய கோப்புகளை நிர்வகிக்க Google Drive இல் சேமித்து வைக்கும் வசதி ஏற்கனவே இருக்கிறது. ஆனால், அதுவே மின்னஞ்சலில் வரும் கோப்புக்களை Google Drive இற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்றால், முதலில் அவற்றைக் கணினியில் தரவிறக்கம் செய்துகொள்ள வேண்டும். அதன் பின்னர்தான் Google Drive இற்கு மாற்றமுடியும்.

ஆனால், இப்போது கணினியில் தரவிறக்காமலேயே நேரடியாக மின்னஞ்சல் Inbox இல் இருந்தே ஒரே க்ளிக்கில் Google Drive இல் சேமித்துக்கொள்ளலாம். Google Drive இல் எந்தப் பிரிவில் சேமிக்க வேண்டும் என்பதையும் தீர்மானிக்கலாம். அதுமட்டுமல்ல, சேமிக்கும் முன், வந்திருக்கும் கோப்பினை முன்னோட்டம் பார்க்கும் வசதியும் இருக்கிறது. முன்னோட்டத்தைச் சிறிய வடிவிலும் பார்க்கலாம். முழுத் திரையாகவும் பார்க்கலாம். கோப்பினைத் திறக்காமலேயே அதில் உள்ளவற்றைத் தேடியும் பார்க்கலாம். இணைப்புக் கோப்புக்களை நேரடியாக Google Drive இல் சேமித்துவிடுவதால், அவற்றைக் கொண்டு வந்த மின்னஞ்சல்களை அழித்தும் விடலாம்.

Cloud சேமிப்பு வசதியான Goole Drive மற்றும் Dropbox போன்றவற்றைப் பயன்படுத்துவது அதிகரித்திருக்கும் நிலையில், நேரடியாக மின்னஞ்சலிலிருந்து Google Drive இலேயே சேமிக்க முடிவது வரவேற்கத்தக்க முன்னேற்றமே! இது போன்ற வசதி Dropbox இல் ஏற்கனவே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.







இங்கே வெட்டவும்

# iOS 7.0.4 புதிய பதிப்பு வெளியானது...!

Apple நிறுவனத்தினால் அதன் மொபைல் சாதனங்களுக்காக வடிவமைக்கப்பட்ட இயங்குதளமே iOS ஆகும்.

இதன் புதிய பதிப்பான iOS 7 இனைச் சில மாதங்களுக்கு முன்னர் வெளியிட்டிருந்த நிலையில், அதில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு, புதிய பதிப்பினையும் வெளியிட்டுள்ளது. இதில் முன்னைய பதிப்பில் காணப்பட்ட சில தவறுகள் நீக்கப்பட்






டுள்ளதுடன், FaceTime Application உம் மேம்படுத்தப்பட்டுள்ளதாக Apple நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் சில மேம்படுத்தப்பட்ட பதிப்புக்களை Apple வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில், தற்போது iOS 7.0.4 எனும் இதனை iPhone, iPad மற்றும் iPod Touch ஆகியவற்றில் update செய்துகொள்வதற்கு Settings > General > Software Update என்ற படிமுறையைப் பின்பற்றும்படி Apple அறிவுறுத்தியுள்ளது.

# Phillips நிறுவனத்தின் புதிய Android Tablet



பிரபலமான இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றான Phillips ஆனது Google இன் Android 4.1 Jelly Bean இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்ட Phillips Amio எனும் Tablet ஒன்றினை அறிமுகம் செய்திருக்கின்றது.

இச்சாதனம், 7 அங்குல அளவு மற்றும் 1024 x 600 Pixel Resolution தொடுதிரையைக் கொண்டது. இதில் 1.5 GHz வேகத்தில் செயலாற்ற வல்ல Dual-Coreprocessor மற்றும் பிரதான நினைவகமாக 1GB RAM ஆகியன காணப்படுகின்றன.



இவை தவிர 3,000 mAh மின்கலம், 8GB சேமிப்பு நினைவகம் ஆகியவற்றினையும் உள்ளடக்கியுள்ள இச்சாதனத்தின் அறிமுக விலை 100 யூரோக்கள் ஆகும்.





# Sunglass மூலம் iPhone களை சார்ஜ் செய்யலாம்!

மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ள iPhone களை மையமாகக் கொண்டு பல்வேறு சாதனங்கள் இன்று உற்பத்தி செய்யப்படுகின்றன. iPhone களுக்கெனப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்படும் இந்தச் சாதனங்களின் விற்பனையும் அமோகமாகவே இருந்து வருகிறது.



அந்த வரிசையில், தற்போது சூரியசக்தியை மின்சாரமாக மாற்றும் தன்மைகொண்ட Sunglass ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. Sayalee Kaluskar என்பவரால் வடிவமைக்கப்பட்ட இந்த Sunglass இனைப் பயன்படுத்தி iPhone களைச் சார்ஜ் செய்துகொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.



வெயில் நேரத்தில் இந்தக் கண்ணாடியை அணிந்து கொண்டு செல்லும் போது, அது சூரிய ஒளியிலிருந்து மின்சாரத்தைச் சேமித்துக் கொள்கின்றது. பின்னர் அதனை iPhone இல் இணைப்பதன்மூலம் அதனை மின்னேற்றிக்கொள்ளலாம்.



**அன்பு வாசகர்களே...!**

'நுட்பம்' பகுதியில் வெளியாகும் தகவல்கள் குறித்து உங்கள் கருத்துக்களை அறிய விரும்புகின்றோம். அத்துடன், இப்பகுதியூடாக நீங்கள் மேலதிகமாக அறிய விரும்புகின்ற கணினி சார்ந்த விடயங்கள் குறித்தும் எமக்கு அறியத்தாருங்கள். nutpamvijey@gmail.com எனும் மின்னஞ்சலூடாக, உங்கள் கருத்துக்களையும் நீங்கள் அறிய விரும்பும் விடயங்களையும் இன்றே முன்வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14


# பொதுத் தகவல் தொழில்நுட்பம் General Information Technology GIT

கணினி என்பது, ஓர் இலத்திரனியல் சாதனமாகும். இது தரவுகளை ஒரு செய்முறைக்கு உட்படுத்தி அதிலிருந்து பயனுள்ள வெளியீடுகளைத் தரும். அத்துடன், Programme களைக் கட்டுப்படுத்துகின்ற, சேமிக்கின்ற செயற்பாடுகளைச் செய்யக்கூடிய சாதனமாகவும் கணினி செயற்படுகின்றது.

**கணினிக்கு உரித்தான பயன்பாடுகளையும் இயல்புகளையும் பின்வருமாறு பட்டியலிடலாம்:**

1. **வேகம்** (Speed)
2. **திருத்தம்** (Accuracy)
3. **நம்பகத்தன்மை** (Reliability)
4. **சேமித்தல் தகைமை** (Storage Capability)
5. **தொட்டுணரமுடியாத நன்மைகள்** (Intangible Benefits)
6. **குறைந்த செலவினம்** (Reduced Cost)

## வேகம்:



கணினி ஆனது எண்கணிதச் செயற்பாடுகள், ஆவணங்களை இடம் மாற்றல், பிரதிசெய்தல் போன்ற செயற்பாடுகளை ஒரு நிமிடத்தில் மில்லியன் அல்லது பில்லியன் ஆணைகள் (Instructions) என்ற வேகத்தில் செயற்படுத்தும் தன்மை வாய்ந்தது.

## திருத்தம்:



கணினிகள் மிகத் திருத்தமானவை. மில்லியன் எண்ணிக்கையான செயற்பாடுகளை மிகத் திருத்தத்துடன் செயற்படுத்தும். ஏனெனில், அதன் சுற்றுக்கள் தேய்வடையக் கூடிய அல்லது குறைந்து செயற்படக்கூடிய இயந்திரவியல் பாகங்களாக இருக்கா. அவை தொடர்ச்சியாக வழுக்கலின்றிச் செயற்படக் கூடிய ஆற்றலைக் கொண்டவை.


## நம்பகத்தன்மை:

கணினியில் உட்செலுத்தும் (Input) தகவல்கள் மற்றும் Programme Instruction (நிகழ்வு ஆணைகள்) நம்பகரமானதாகவும் நிரந்தரமானதாகவும் இருந்தால், அதன் தீர்வுகளும் (Output) பொதுவாகச் சரியானதாக இருக்கும்.




## சேமித்தல் தகைமை:


கணினிகள் தகவல்களைச் சேமித்து வைத்திருக்கும் தன்மை கொண்டவை. அதாவது, கணினிகள் மில்லியன் (அல்லது அதைவிட அதிகமான) எண்ணிக்கையான தகவல்களை ஒடுங்கிய வடிவத்தில் சேமிக்கக்கூடியவை.




## தொட்டுணரமுடியாத நன்மைகள்:



பல நிறுவனங்களில் கணினியானது உருவமற்ற நன்மைகளையும் (வேலைப் பளுவைக் குறைத்தல், விரைவான செயற்பாடுகள்...) ஏற்படுத்திக் கொடுப்பதுடன், நுகர்வோரின் உளவியல் காரணிகளைக் கவருதல் போன்ற செயற்பாடுகளிலும் பயன்படுத்தப்படுகின்றது.



## குறைந்த செலவினம்:




தொடர்ச்சியாக அதிகரித்து வரும் தகவல் தொழில்நுட்பத்தின் அபிவிருத்தியால் கணினிகளின் விலையானது குறைவடைந்து கொண்டு செல்கிறது. இதனால், முன்னைய ஆண்டுகளைவிடக் குறைவான விலையில் நவீன கணினிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்தோட்டம் அமைப்பதற்குத் தேவையான அடிப்படை விடயங்கள்



வீட்டுத்தோட்டம் ஒன்றை அமைப்பதற்குத் தேவையான அடிப்படை விடயங்கள் எவையென்று பார்ப்போம். வளமான தோட்டம் ஒன்றை அமைக்கும்போது கவனிக்கப்பட வேண்டிய சில விடயங்கள் உள்ளன. சூரிய ஒளி, நீர், மண் என்பனவே



அத்தகைய அடிப்படை விடயங்களாகும். இந்த இயற்கை வளங்களைச் சரியான முறையில் முகாமைத் துவப்படுத்திக்கொள்வதனூடாக வீட்டுத்தோட்டத்தினைச் சரியான முறையில் அமைத்துக்கொள்ளமுடியும். அத்துடன், நேரத்தையும் நாம் வகுத்து முகாமைத்துவம் செய்வதனால், வீட்டு வேலைகள், பாடசாலை வேலைகள் மற்றும் வீட்டுத்தோட்ட வேலைகள் என்பனவற்றைச் சரியான முறையில் நிர்வகித்துக்கொள்ள முடியும்.

## சூரியஒளி

பயிர்கள், செடி கொடிகள் வளர்வதற்கு சூரியஒளி இன்றியமையாததாகும். தாவரங்களின் பச்சை இலைகளில் சூரியஒளி படுவதனால், உணவு உற்பத்தி ஆரம்பமாகின்றது. வீட்டுத்தோட்டத்தில் உள்ள பெரிய மரங்களின் கிளைகளை வெட்டி, தாவரங்கள் வளர்வதற்கு ஏற்ற சூரியஒளியினை வீட்டுத் தோட்டத்திற்குக் கிடைக்க வழிஏற்படுத்த வேண்டும். வீட்டுத்தோட்டத்தில் சூரியஒளி விழும் இடங்களை முதலில் ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள். கண்கவர் மலர்ச் செடிகளைச் சூரியஒளி கிடைக்கும் இடங்களில் வளர்க்க முடியும்.

வாழை மரம், இஞ்சி, மஞ்சள் ஆகிய கிழங்கு வகைகளுக்கு சூரிய ஒளி அதிகம் தேவைப்படாது. இதனால், இவ்வாறான தாவரங்களை மரங்களின் கீழ் பயிரிட முடியும்.

## நீர்

தாவரங்களுக்கு நீர் அவசியமாகும். வீட்டுத் தோட்டத்திற்குப் பல வழிகளில் நீரைப் பெற முடியும். மழை நீர், கிணற்று நீர், வீணாகும் நீர் சேரும் இடம் என்பனவற்றை தேடி ஆராய்ந்து அறிந்துகொள்ளுங்கள்.

நீர் வரத்துக் குறைவான இடங்களில் ஈரளிப்பைத் தக்கவைத்து, கீரை வகைகளைப் பயிரிட முடியும். சமையலறையில் இருந்து வெளியேற்றும் நீரைச் சேகரித்து வீட்டுத்தோட்டத்திற்குப் பயன்படுத்துங்கள். தேசிக்காய், தோடை, மாமரம் ஆகிய பழ மரங்களை நீர் அதிகம் சேராத இடத்தில் பயிரிடலாம்.

## மண்

சிவப்பு மண்ணிற மண், பயிர்ச் செய்கைக்கு உகந்தது. வீட்டுத் தோட்டத்தில் பல மண் வகைகள் காணக்கூடும். மண்ணை வளப் படுத்துவதற்குப் பசளை, தாவர எச்சங்கள், தேங்காய் மட்டை ஆகிய உரங்களைப் பயன்படுத்த முடியும். மண் வகையை அறிந்து அதற்கு ஏற்ப பயிரிட முடியும்.

# தெரிந்து கொள்வோம்

* தயிராக மாற்ற முடியாத பால் எது?
  ஒட்டகப் பால்





* புக்கர் பரிசு பெற்ற இந்திய பெண் எழுத்தாளர் யார்?
  அருந்ததி ராய்



* வைரத்துக்கு புகழ்பெற்ற இடம் எது?
  தென் ஆபிரிக்கா



* புனித வெள்ளியன்று கொலை செய்யப்பட்டவர் யார்?
  அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன்
* சிவப்பு ரத்த அணுக்களின் ஆயுட்காலம் எத்தனை?
  120 நாட்கள்



* உலகில் எத்தனை நாடுகளில் கடற்கரை இல்லை?
  26 நாடுகளில்
* கடிகார ஓசையின் அளவு எவ்வளவு?
  30 டெசிபல்



* 1 கோடி என்பதை மில்லியனில் எவ்வாறு குறிப்பிடலாம்?
  10 மில்லியன்
* கின்னஸ் புத்தகம் எங்கு வெளியிடப்படுகின்றது?
  லண்டனில்



* சர்வதேச பொலிஸ் தாபனமான இன்டர்போலின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?
  பெரிஸில்
* பச்சை நிற ஒளியில் சிவப்பு வண்ணப் பொருட்கள் எவ்வாறு தெரியும்?
  கறுப்பு நிறத்தில்

தொகுப்பு: உடுவை பரந்தாமன்


## விஜய் — Top News உடன்வழங்கும் மாதம் ஒரு Galaxy Smartphone...

கல்விசார் APPS கள்

பிரதி புதன்கிழமைகளில் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு மாத இறுதியிலும் 'Top News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விகளுக்கான சரியான விடையினை அம்மாதத்தில் வெளிவந்த 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வெல்லுங்கள்



மாதாந்தம் Phone இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

இப்போட்டிக்கான கேள்வி 'Top News' SMS ஊடாகக் கேட்கப்பட்டுள்ளது.

நொவெம்பர் மாத கேள்விக்கான விடை:

விடை : ..................

பெயர் : ..................

முகவரி : ..................

தொ.பே.இல : ..................

பாடசாலை : ..................

தரம் : ..................

..................

கையொப்பம்

அனுப்பவேண்டிய முகவரி:

Phone போட்டி (நொவெம்பர்), விஜய், த.பெ.இல-2037, கொழும்பு.

சரியான விடையை அனுப்புவோரில் மாதாந்தம் ஒரு அதிர்ஷ்டசாலி தெரிவுசெய்யப்பட்டு அவருக்கு ஒரு Samsung Galaxy Star GT-s5282 Duos Phone பரிசாக வழங்கப்படும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் கமலுக்கும் சமனுக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**සමන්: කමල්, සීනුව ගැහැව්වා. ගෙදර යන්නේ නැද්ද?**
கமல், சீனுவ கெஹெவ்வா. கெதற யன்னே நெத்த?
சமன்: **கமல், மணி அடித்தது. வீட்டிற்குப் போகவில்லையா?**

**කමල්: යනව සමන්. මම මේ පොත විදුහල්පතිගේ කාමරයේ තියලා එන්නම්.**
யனவ சமன். மம மே பொத விதுஹல்பதிகே காமரயே தியலா என்னம்.
கமல்: **போகிறேன் சமன். நான் இந்தப் புத்தகத்தை அதிபரின் அறையில் வைத்துவிட்டு வருகிறேன்.**

**සමන්: හොඳයි. මම මෙතන ඉන්නම්.**
ஹொந்தய். மம மெதன இன்னம்.
சமன்: **நல்லது. நான் இங்கே இருக்கிறேன்.**

**කමල්: හා.. මම ඉක්මණට එනවා.**
ஹா... மம இக்மணட்ட எனவா.
கமல்: **ஹா... நான் கெதியாக வருகிறேன்.**

**கமல் வந்த பின்னர்...**

**කමල්: අපි යමු සමන්.**
அப்பி யமு சமன்.
கமல்: **நாங்கள் போவோம் சமன்.**

**සමන්: කමල්, ඔයා අද හවස ගණිතය පන්ති යන්න එනවා ද?**
கமல், ஒயா அத ஹவஸ கணிதய பந்தி யன்ன எனவா த?
சமன்: **கமல், நீ இன்று பின்னேரம் கணித வகுப்புக்குப் போக வருவாயா?**

**කමල්: ඔව් සමන්. මම ඔයාලගේ ගෙදර එන්නම්. අපි දෙන්නම යමු.**
ஒவ் சமன். மம ஒயாலகே கெதற என்னம்.
அப்பி தென்னம யமு.
கமல்: **ஆம் சமன். நான் உங்களுடைய வீட்டிற்கு வருகிறேன். நாம் இருவரும் போவோம்.**



## பயிற்சிகள்

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

01. மணி அடித்தது.
.................................................
02. நான் இங்கே இருக்கிறேன்.
.................................................
03. நாம் இருவரும் போவோம்.
.................................................

**இடைவெளிகளை நிரப்புக.**

1. ..............................**යන්නේ නැද්ද?**
2. **මම ඉක්මණට** ..............................
3. ........................ **ගෙදර එන්නම්.**




✱ 'Did' எனும் துணை வினைச்சொல் பற்றி இதுவரை படித்தோம் அல்லவா? 'Did' எனும் இறந்தகால துணை வினைச்சொல்லின் (Past Tense Auxiliary Verb) நிகழ்கால வடிவம் 'Do' என்பதாகும்.

✱ Do எனும் நிகழ்கால துணை வினைச்சொல்லும் (Present Tense Auxiliary Verb). இலக்கண ரீதியாக முதன்மை துணை வினைச்சொல் (Principal Auxiliary Verb) எனக் கூறப்படுகின்றது.

✱ Do எனும் துணை வினைச்சொல்லை, ஒரு வாக்கியத்தில் தனியொரு வினைச்சொல்லாக/ முழு வினைச்சொல்லாக (Full Verb) கையாளுகின்றபோது, Do என்பதற்கு அவ்வாக்கியத்தில் தனியான ஓர் அர்த்தத்தைப் பெற முடிகின்றது.

✱ இங்கே, Did எனும் இறந்தகால வினைச்சொல்லையும் Do எனும் நிகழ்கால வினைச்சொல்லையும் ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) நான் எனது வேலையை நேற்றுச் செய்தேன். (இறந்தகாலம்)
I did my work yesterday. (Past Tense)

(ஆ) நான் எனது வேலையை தினமும் செய்கின்றேன். (நிகழ்காலம்)
I do my work daily.

| | |
|---|---|
| ✱ I did (Past Tense)<br>நான் செய்தேன். (இறந்தகாலம்) | ✱ I do. (Present Tense)<br>நான் செய்கின்றேன். (நிகழ்காலம்) |

(இ) நீ உனது வேலையை நேற்றுச் செய்தாய். (இறந்தகாலம்)
You did your work yesterday.(Past Tense)

(ஈ) நீ உனது வேலையை தினமும் செய்கின்றாய். (நிகழ்காலம்)
You do your work daily. (Present Tense)

| | |
|---|---|
| ✱ You did. (Past Tense)<br>நீ செய்தாய். (இறந்தகாலம்) | ✱ You do. (Present Tense)<br>நீ செய்கின்றாய். (நிகழ்காலம்) |

(உ) நாங்கள் எங்கள் வேலையை நேற்றுச் செய்தோம். (இறந்தகாலம்)
We did our work yesterday. (Past Tense)

(ஊ) நாங்கள் எங்கள் வேலையை தினமும் செய்கின்றோம். (நிகழ்காலம்)
We do our work daily. (Present Tense)

| | |
|---|---|
| ✱ We did. (Past Tense)<br>நாங்கள் செய்தோம்.(இறந்தகாலம்) | ✱ We do.<br>நாங்கள் செய்கின்றோம். (நிகழ்காலம்) |

(எ) அவர்கள் தங்கள் வேலையை நேற்றுச் செய்தனர். (இறந்தகாலம்)
They did their work yesterday. (Past Tense)

(ஏ) அவர்கள் தங்கள் வேலையை தினமும் செய்கின்றனர். (நிகழ்காலம்)
They do their work daily. (Present Tense)

| | |
|---|---|
| ✱ They did. (Past Tense)<br>அவர்கள் செய்தனர். (இறந்தகாலம்) | ✱ They do. (Present Tense)<br>அவர்கள் செய்கின்றனர். (நிகழ்காலம்) |

**குறிப்பு:** He, She, It முதலான பிரதிப் பெயர்ச்சொற்கள் (Pronouns) சகிதம், Do என்பதற்குப் பதிலாக 'Does' எனும் வினைச்சொல் கையாளப்பட வேண்டும் என்பதை ஞாபகத்தில் கொள்வோம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெஜிக் உலகில்...

# பென்சிலை வளைப்போம்

இது சிறு பிள்ளைகள் நன்கு அறிந்த ஒரு மாயாஜால வித்தையாகும். ஆனால், எந்தளவு இந்த மாயாஜாலம் வியப்புக்குரியது என்பதைப் பாருங்கள்.


**தேவையானவை:**

பென்சில் ஒன்று

**பின்பற்றப்படும் செயல்முறைகள்:**


பென்சிலை இரண்டு விரல்களினால் பிடித்து, மேலேயும் கீழேயும் அசைப்பதனூடாகப் பென்சிலை வளைத்தல்.

**முதலாவது படிமுறை:**



உங்களுக்கு வசதியான கையில் பெருவிரலையும் ஆட்காட்டி விரலையும் பயன்படுத்தி இவ்வாறு பென்சிலைப் பிடித்துக்கொள்ளுங்கள். பென்சிலை இறுக்கிப் பிடிக்க வேண்டாம். அதுதான் இந்த வித்தையின் ரகசிய நுணுக்கமாகும்.

**2 ஆவது படிமுறை:**



படிப்படியாகப் பென்சிலை மேலேயும் கீழேயும் கொண்டு சென்று வேகமாகவும், மீண்டும் மெதுவாகவும் கையை அசைப்பதற்குப் பழகிக் கொள்ளுங்கள். தன்னம்பிக்கையுடன் இயங்கக் கூடிய வேகத்தைக் கையாளுங்கள்.

**3 ஆவது படிமுறை:**



இப்பொழுது பழம்பெரும் மாயாஜால வித்தைக் காரரைப் போன்று, நீங்கள் இப்பொழுது கற்ற நுணுக்கத்தினைப் பயன்படுத்திப் பென்சிலை வளைக்கும் செயற்பாட்டினைச் செய்து காட்டுங்கள்.

பென்சிலை அசைக்கும்போது நீங்கள் பென்சிலைப் பிடித்துள்ள இடத்திற்குச் சற்று முன்பாகத்தான் பென்சில் வளைவது போன்று தோன்றும். ஆனால், பென்சில் வளைவதில்லை. அது கண்களைக் கட்டும் ஒரு வித்தையாகும். **மெஜிக் மாமா**



# 2032 இல் உலகம் அழியுமா?

**2032** ஆம் ஆண்டில் பாரியளவிலான விண்கல் ஒன்று பூமியுடன் மோதவுள்ளதாக உக்ரேன் வானியல் அறிஞர்கள் சிலர் அண்மையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்தனர். இந்த விண்கல்லினை 2013 TV135 என்று பெயரிட்டு அழைக்கின்றனர். க்ரிமியன் அஸ்ட்ரோஃபிசிக்கல் ஆய்வகத்தினால் இதுதொடர்பான கண்காணிப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த விண்கல் பூமியில் மோதினால் அதன் தாக்கமானது, அணு வெடிப்பொருள் அடங்கிய 2,500 ஏவுகணைகள் வெடிப்பதற்குச் சமமானது என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த விண்கல்லின் அகலம் 1,300 அடி என்று கணிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்த விண்கல் பூமியில் மோதுவதற்கான சாத்தியம் 63,000 இற்கு 1 என்ற அடிப்படையிலேயே உள்ளது. 2024 ஆம் ஆண்டு இந்த விண்கல் பூமிக்கு அருகாமையில் நெருங்கி வரும் என்றும் அப்பொழுது விஞ்ஞானிகள் ஆய்வுகளை மேற்கொண்டு பூமியில் எந்தப் பகுதியுடன் மோதவுள்ளது என்பதைக் கண்டறிவர் என்றும் கூறப்படுகின்றது.

# பொலன்னறுவை தலதா வளாகம்

அனுராதபுர இராஜதானியின் வீழ்ச்சியின் பின்னர் பொலன்னறுவை இராஜதானியின் காலப்பகுதி 11 ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்து 13 ஆம் நூற்றாண்டில் வீழ்ச்சியடைந்தது. இலங்கை வரலாற்றின் முக்கியமான காலப்பகுதியாகப் பொலன்னறுவைக் காலம் கருதப்படுகின்றது. இலங்கையின் தலைநகராகப் பொலன்னறுவை திகழ்ந்தமையால், இது ஒரு பொற்காலமாகவும் கருதப்படுகின்றது. அத்துடன், இங்கு அமையப்பெற்றுள்ள வரலாற்றுப் புராதனச் சின்னங்களுள் ஒன்றான தலதா கோபுரம் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

தூபாராமக் கட்டடம், இரத்தினகிரி சந்திரவட்டக்கல், நிஸ்ஸங்கலதா மண்டபம், உறங்கும் சிலை கொண்ட சிலைகள் இல்லம், கல்பொத்த ஆவணம் மற்றும் போய இல்லம் போன்ற கட்டடங்களினால் முழுமையடைந்த இடமாகத் தலதா கோபுரம் காணப்படுகின்றது. தலதா கோபுரப்பகுதிக்குச் செல்லக்கூடிய வாயிலில் இரண்டு படிக்கட்டுத் தொகுதிகள் உள்ளன. இடது பக்கம் உள்ள படிக்கட்டுப் பகுதியில் நாய் மற்றும் காகத்தினது கற்சிலைகள் காணப்படுகின்றன. படிக்கட்டின் அடிவாரத்தின் வலதுபுறம், தலதா கோபுரப் பிரதேசத்தினுள் பிரவேசிக்கும் பகுதியில், சிறிய ஓடம் ஒன்றும் உள்ளது.



வட்டதாகே



தலதா கோபுரப் பகுதிக்குள் பிரவேசிக்கும் ஒரு பாதை.



தூபாராம சிலை அரண்மனை



கற்புத்தகக் கடிதம்



நிஸ்ஸங்க லதா மண்டபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறங்கள்



ரோஜாப் பூவோ சிவப்பு
இலைகள் பலவும் பச்சை
இரவின் நிறமோ கறுப்பு
வானின் நிலவோ வெள்ளை!

ஆகாய நிறமோ நீலம்
மண்ணின் நிறமோ கபிலம்
தூய நீரில் இல்லை
வண்ண வடிவ நிறங்கள்!

ரிஸ்லின்,
கெப்பிடிய மு.ம.வித்., கலேவெல.

# பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு




பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு (Commonwealth Heads of Government Meeting- CHOGM) இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறுகின்றது. இம்மாநாடு, பொதுநலவாய அமைப்பின் அங்கத்துவ நாடொன்றில் நடைபெறும். பொதுநலவாய அரசத் தலைவர்களின் மாநாடுகளின்போது, அங்கத்துவ நாடுகள் எதிர்கொள்ளும் சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் மற்றும் நடப்பாண்டு நிகழ்வுகள் குறித்து ஆராயப் படும்.




23ஆவது மாநாடு இவ்வருடம் (2013) கடந்த 10 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை இலங்கையில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. இதில் பல நாடுகளின் அரச தலைவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

ஆர்.எம்.ரஸ்மி,
வெலிமட மு.ம.வித்., வெலிமட.



களுத்துறை முஸ்லிம் ஆண்கள் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.நவிநவாஸ் என்ற மாணவன் விஜய் பத்திரிகையைக் குறிக்கும் விதமாகத் தனது வித்தியாசமான கற்பனைச் சித்திரத்தை வழங்கியுள்ளமையை இங்கு காணலாம்.



## இலங்கையில் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகள்

| | |
|---|---|
| ★ பொலிஸ் திணைக்களம் | - 1866 |
| ★ புகையிரத சேவை | - 1870 |
| ★ உபதபால் அலுவலகம் | - 1821 |
| ★ அஞ்சல் சேவை | - 1832 (பிரித்தானியர்) |
| ★ அஞ்சல் முத்திரை | - 1857 |
| ★ இறப்பர் செய்கை | - 1876 |
| ★ தேயிலைச் செய்கை | - 1839 |
| ★ கோப்பிச் செய்கை | - 1823 |
| ★ இலங்கை போக்குவரத்து சபை | - 1958 |
| ★ மக்கள் வங்கி | - 1961 |
| ★ தேசிய சேமிப்பு வங்கி | - 1972 |

எம்.ஐ.எஃப்.இஸ்ரா,
அல்-அகீல் மு.ம.வித்.,
கொட்டியாகும்புர.

## சிறுமியின் உதவி

அழகிய இயற்கை எழில் மிகுந்த நகரம் அது. அதனைக் கீர்த்திராஜன் எனும் அரசன் ஆட்சிபுரிந்து வந்தான். மக்களின் நலனைப் பற்றியே எப்போதும் சிந்தித்துக்கொண்டிருக்கும் அரசன் கீர்த்திராஜன் இரவு வேளைகளில் மாறுவேடத்தில் நகரை உலா வருவது வழக்கம். அன்றொருநாள் மாலைவேளை மன்னன் கீர்த்திராஜன், பாதையோரமாகச் சென்று கொண்டிருந்தார். எதிர்பாராத விதமாக வேகமாக வந்த குதிரை வண்டியொன்று மன்னனின்மீது சேற்றை வாரி அடித்துவிட்டுச் சென்றது. அச்சமயம்



அவ்வழியே வந்த சிறுமி ''ஐயோ! பெரியவரே, யார் உம்மீது சேற்றை அடித்துச் சென்றது?'' என்று கூறிக்கொண்டே, அரசன் கீர்த்திராஜனிடம் ஓடி வந்து, அவரைத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். அங்கு சென்றதும் மன்னனுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது!

அச்சிறுமி, தனது அமைச்சரின் மகள் தான்! மன்னர் பற்றி நன்கு அறிந்து வைத்திருந்த அமைச்சர் மன்னரை அடையாளம் கண்டுகொண்டார்.

அமைச்சர் வீட்டில் மன்னர் சிறப்பாக உபசரிக்கப்பட்டார். அடுத்த நாள் அச்சிறுமியை அரசவைக்கு அழைத்த மன்னர், சிறுமியின் நற்குணத்தைப் பாராட்டியதோடு பல்வேறு பெறுமதியான பரிசில்களையும் வழங்கினார். அமைச்சரையும் கௌரவித்தார். சிறுமி மிகவும் அகமகிழ்வுடன் வீடு திரும்பினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்வரும் மரபுத் தொடர்களுக்குப் பொருத்தமான கருத்தின் கீழ் கோடிடுக

4

1) கழுத்துக் கொடுத்தல்:
   1. கழுத்தில் தொங்குதல்
   2. பிறருக்கு உதவுதல்


2) காற்றாய்ப் பறத்தல்:
   1. வெகுவிரைவாகச் செல்லல்
   2. மிதந்து செல்லல்

3) ஒற்றைக்காலில் நிற்றல்:
   1. வேண்டுதல்
   2. பிடிவாதம்

4) வெட்டிப் பேச்சு:
   1. பயனற்ற பேச்சு
   2. ஒருவரை தாக்கிப் பேசுதல்

## படத்திற்குப் பொருத்தமான சொல்லில் ✓ அடையாளமிடுக

3







தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.12.04 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 445
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

## இடைவெளிகளை நிரப்புக

2





## பிரித்து எழுதுக

5

1. ஆடையணி - ..............................
2. வினையெச்சம் - ..............................
3. நீரோடை - ..............................
4. பனங்காய் - ..............................
5. மாவிலை - ..............................
6. பூச்சாடி - ..............................


## '4' ஐ எப்படிப் பெறலாம்?

1



முயற்சித்துப் பாருங்கள்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 61



### மேலிருந்து கீழ்

01. கடல்வாழ் உயிரினமொன்று.
02. பழவகையொன்று.
04. மகளிர் பருவங்களில் ஒன்று. (தலைகீழ்)
06. 'அரைவாசி' என்றும் அர்த்தப்படும். (தலைகீழ்)
08. வாலிபப் பருவம். (தலைகீழ்)
09. காலின் மேற்பகுதி. (தலைகீழ்)
11. இந்த நூலில் இருந்து ஆடைகள் தயாரிக்கப்படுகின்றன. (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

01. கழுத்துப் பகுதியில் ஏற்படும் ஒரு நோய்.
03. முகம் துடைக்கப் பயன்படும்.
05. 'பிரதிவாதி' என்பதன் எதிர்ப்பதம்.
07. ஐக்கிய அரபு ராச்சியத்தின் இந்நகரில், இலங்கையர்களும் தொழில் புரிகின்றனர். (குழம்பியுள்ளது)
08. வினாவுக்குக் கிடைப்பது. (குழம்பியுள்ளது)
10. கோடை காலத்தில் இது அதிகம்.
12. உணவின் சுவையை உணர்வது.

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 60 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பா | ரி | ■ | 2 பு | தி | ர் |
| 3 வ | 4 சி | ■ | ம் | ■ | ■ |
| ல | ■ | 5 மா | 6 வீ | 7 ர | ன் |
| ர் | ல | 8 ம | ■ | க | ■ |
| ■ | ■ | ர | ■ | ளை | 9 து |
| ம் | ப | ம் | 10 வீ | ■ | 11 தீ |

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 442 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எஃப்.அம்ரா, பல்லேகம.

**போட்டி: 02**
பு.கிருஸ்ணகோபால், பண்ணாகம் தெற்கு.

**போட்டி: 03**
என்.சஹிட், திருகோணமலை.

**போட்டி: 04**
எஸ்.ஷராப், அட்டிகுகுல்பிடிய.


**போட்டி: 05**
வீவன் அன்ரானியோ, கண்டி.

**பாராட்டுப் பெறுவோர்:**

- எல்.இரேஷன், கொழும்பு-05.
- என்.மூஹா, பண்டாரகொஸ்வத்த.
- ப.அஜித்கர், வவுனியா.
- கோ.யிவிந்திரா, கொக்கட்டிச்சோலை.
- எம்.ஜஸிம், மாஹோ.
- எம்.சகீல், பளளுவெவ.
- எஸ்.சுஜந்தினி, கொழும்பு-15.
- எம்.நில்ஃபர், மல்வானை.
- எஸ்.சுஷாந்தன், பொகவந்தலாவ.
- யூ.அபிஷன், இளவாலை.

## அறிவுக்கு விருந்து - 442 விடைகள்

**போட்டி: 01**




**போட்டி: 02**




**போட்டி: 04**

1. நான் + அறியேன் - நானறியேன்
2. பாடி + பாடி - பாடிப்பாடி
3. விண் + உலகம் - விண்ணுலகம்
4. கலை + துறை - கலைத்துறை
5. சொல் + அழகு - சொல்லழகு
6. புளி + காய் - புளியங்காய்

**போட்டி: 05**

1. ஆர்ப்பாட்டம்
2. கற்றாழை
3. உயிரியல்
4. விலா எலும்பு
5. மலையாளம்
6. சூழ்நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உக்குவளை-மானம்பொடையைச் சேர்ந்த முர்சிட்-பேகம் தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹம்மட் உமர், 23.11.2013 அன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: எம்.மாலிக்)




உயன்வத்தையைச் சேர்ந்த எம். நஸ்ரின்-நுஸ்ரா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹம்மத் ருஸ்தி, 20.11.2013 அன்று தனது முதலாவது பிறந்ததினத்தைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் பல்கலையும் கற்று, பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: நுஸ்கியா அப்துல்லாஹ்)

தோப்பூர் -06 ஐச் சேர்ந்த லரீப்-சிபானா தம்பதியரின் அன்புப் புதல்வன் அம்மார் அஹம்மட், 20.11.2013 அன்று தனது ஐந்தாவது பிறந்ததினத்தைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று, அல்லாஹ்வின் அருளினால் பல்லாண்டுகள் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.





படல்கும்புரையைச் சேர்ந்த நௌஷாட்-ரிஸ்னியா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் இமாத், 19.11.2013 அன்று தனது மூன்றாவது பிறந்ததினத்தைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: மாஹிரா பர்வின்)

பஸ்யாலையைச் சேர்ந்த முஸம்மில்-நிசா தம்பதியரின் செல்வப் புதல்வி மிஸ்கா முனா, 18.11.2013 அன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.





பனான-வறக்காப்பொளையைச் சேர்ந்த மகிந்த சந்திரகுமார-விக்னேஸ்வரி தம்பதியரின் செல்வப் புதல்வி உபேக்ஷிகா நிவேதனி, 18.11.2013 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகிறார்கள். (தகவல்: திருமதி. ராஜேஸ்வரன்)

சிலாபத்தைச் சேர்ந்த சதானந்தன்-சந்திரிகா தம்பதியரின் செல்வப் புதல்வி சவுந்தரி, 12.11.2013 அன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.









ஐக்கிய நாடுகள் சபையினால் அகில இலங்கை ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்ட 17-29 வயதுக்கு உட்பட்டோருக்கான 'எனது இலங்கை எனது எதிர்காலம்' எனும் தலைப்பிலான Digital Art போட்டியில், மாவனல்லை ஸாஹிரா கல்லூரியில் தரம் 13 கலைப் பிரிவில் கல்வி பயிலும் எம்.எஸ்.எம்.சாபிர், மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். இவருக்குச் சான்றிதழ், கேடயம் மற்றும் டிஜிட்டல் கெமரா என்பன வழங்கப்பட்டதோடு, ewis Colombo Ltd இன் ஹம்பாந்தோட்டையில் அமைந்திருக்கும் இலங்கையின் முதலாவது கணினித் தொழிற்சாலைக்கு இலவசப் பயணமொன்றை மேற்கொள்வதற்கான வாய்ப்பும் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.



சி.மதுசாந்த்,
விஜயரத்தினம் இ.ம.கல்.,
நீர்கொழும்பு.



எம்.ஆகிஃப்,
எதுன்கஹகொடுவ மு.ம.கல்.,
எதுன்கஹகொடுவ.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு




ச.சர்ஜீகன்,
யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.




என்.மர்யம்,
அல்-மனார் மத்திய கல்.,
முறுதகஹமுல.



எ.மெல்ஹியன்,
வவுனியா த.ம.ம.வித்., வவுனியா.



எஃப்.திப்திஹா,
பாத்திமா பாலிகா ம.வித்.,
முள்ளிப்பொத்தானை.



எஃப்.முனீரா,
அஜ்மீர் தே.பாட.,
உக்குவளை.



ஆசியா ஃபாஹிர்,
அல்-அஷ்ரக் ம.வித்., தல்கஸ்பிடிய.

# உலகப் புகழ்பெற்ற ஓவியர்கள் சிலர்...

Thirst





The Hunters in the Snow

பீற்றர் ப்ருகல், ஒல்லாந்த மற்றும் ஃப்ளெமிய மறுமலர்ச்சிக் கால ஓவியராவார். இவர், 1525 ஆம் ஆண்டு ஹப்ஸ்பர்க் நெதர்லண்ட்ஸின் (இன்றைய பெல்ஜியம்), 'ப்ரீ' எனும் நகரில் பிறந்தார்.

அன்றைய காலகட்டத்தில் புகழ்பெற்று விளங்கிய பீற்றர் கோக் வேன் ஏல்ஸ்ட் எனும் ஓவியரின்கீழ் ப்ருகல் ஓவியத் தொழிற்பயிற்சி பெற்றார் எனவும் பிற்காலத்தில், பீற்றர் கோக்கின் மகளையே இவர் திருமணம் முடித்ததாகவும் கூறப்படுகின்றது. பிரான்ஸ் மற்றும் இத்தாலி ஆகிய நகரங்களில் சில காலங்களைக் கழித்த ப்ருகல் பின்னர் பெல்ஜியத்தின் ஆன்ட்வேர்ப் நகருக்குச் சென்றார். 1551 ஆம் ஆண்டில், நவீன ஐரோப்பாவின் ஓவியர்கள் சங்கத்திலும் உறுப்பினரானார்.

இயற்கைக் காட்சிகள், மனித குலத்துடன் தொடர்பான ஓவியங்கள் மற்றும் மதம் சார்ந்த ஓவியங்களை வரைந்து புகழ்பெற்றார். Landscape with the Fall of Icarus, The Hunters in the Snow, The Peasant Wedding, The Beggars, Thirst, Two Monkeys, Netherlandish Proverbs, Children's Games என்பன அவர் வரைந்த சில ஓவியங்களாகும். தனது இறுதிக் காலத்தை ப்ரசெல்ஸ் நகரில் கழித்த ப்ருகல், 1569 ஆம் ஆண்டு செப்டெம்பர் 9 ஆம் திகதி அங்கேயே இயற்கை எய்தினார்.



பீற்றர் ப்ருகல்
(1525-1569)

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடிப்புக்கள்



எலி வைட்னி
(Eli Whitney)
1793 - அமெரிக்கா



பஞ்சு கடையும் இயந்திரம்




ஜேம்ஸ் வொட்
(James Watt)
1781 - ஸ்கொட்லாந்து



நீராவி இயந்திரம்



தியோடோர் மெய்மன்
(Theodore Maiman)
1960 - அமெரிக்கா



ரூபி லேசர்



எல்மர் ஏ.ஸ்பெரி
(Elmer H.Sperry)
1910 - அமெரிக்கா



திசைகாட்டி



ஃபொஸ்டோ வெரன்ஸியோ
(Fausto Veranzio)
1617 - வியட்னாம்



பெரசூட்



ஒட்டோ விச்சர்ல்
(Otto Wichterle)
1961 - செக் குடியரசு



நவீன தொடுவில்லை
(Contact lenses)

## வெட்சி பூ



வெட்சி பூ (இட்லி பூ) என்பது Rubiaceae குடும்பத்தைச் சேர்ந்த தாவரமாகும். பசுமையான மலர்ச்செடிகளான Rubiaceae குடும்பத்தில் 529 சிற்றினங்கள் காணப்படுகின்றன. உலகெங்கிலுமுள்ள அயன மண்டல, உப அயன மண்டல நாடுகளில் இதன் பல்வகைமை செறிந்து காணப்படுகின்றது. இப்போது ஐக்கிய அமெரிக்க நாடுகளிலும் வெட்சி பூ வளர்க்கப்படுகின்றது. இத் தாவரம் 3-6 அங்குலம் நீளமுள்ள தோல் போன்ற இலையையும் சிறு பூக்களின் கொத்துக்களாலுமானது. அமில மண்ணுக்குப் பொருத்தமான இத்தாவரம் பொன்சாய்ச் செய்கைக்கு ஏற்றது. வெட்சி என்பது ஒருவகைக் காட்டுப்பூ. தற்போது அழகுக்காக வீடுகளிலும் வளர்க்கப்படுகிறது. சங்ககாலத்தில் போருக்குச் செல்வோர் செந்நிற வெட்சி பூவைச் சூடிச் செல்வர்.

| | |
|---|---|
| திணை (இராச்சியம்) | : தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : பூக்கும் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : இருவித்திலைத் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : *Asterids* |
| வரிசை | : *Gentianales* |
| குடும்பம் | : *Rubiaceae* |
| துணைக்குடும்பம் | : *Ixoroideae* |
| Tribe | : *Ixoreae* |
| பேரினம் | : *Ixora L.* |

# உயிரியல் வகைப்பாடு

## செண்பகப் பூ



நறுமணம் தரும் ஒருவித மஞ்சள் மலர் செண்பக மலர். இதனைப் பொதுவாக 'மஞ்சள், பச்சை ஓர்க்கிட் மலர்' என்றும் அழைப்பர். இது தென் ஆசியா, தென்கிழக்கு ஆசியா, சீனா போன்ற பகுதிகளில் வளரக்கூடிய பசுமையான மரமாகும்.

| | |
|---|---|
| திணை (இராச்சியம்) | : தாவரம் |
| பிரிவு | : பூக்கும் நிலைத்திணை |
| வரிசை | : *magnoliales* |
| குடும்பம் | : *magnoliaceae* |
| பேரினம் | : *mognolia* |
| இனம் | : *M.champaca* |

## வேப்பம் பூ



வேப்ப மரம் இந்தியா, இலங்கை, மியன்மார் போன்ற நாடுகளில் வளரக்கூடியது. மிகவும் பயனுள்ள ஒரு மரம். இதன் மருத்துவப் பண்புகள் கருதி, ஒரு மூலிகை என்றும் வகைப்படுத்தலாம். இதன் இலைகள் கிருமிகளை அழிக்கும் தன்மை கொண்டவை. வேப்பம் பூவில் இருந்து வேப்பம் பூ வடகம், ரசம் போன்றவற்றைத் தயாரிக்கலாம். வேப்பெண்ணெய் மருத்துவ ரீதியாக பயன்படுத்தப்படுகின்றது.

| | |
|---|---|
| திணை (இராச்சியம்) | : நிலைத்திணை |
| பிரிவு | : பூக்கும் நிலைத்திணை |
| வரிசை | : *Sapindales* |
| குடும்பம் | : *Meliaceae* |
| பேரினம் | : *Azadirachta* |
| இனம் | : *A.indica* |

## நாகலிங்கப் பூ



நாகலிங்க மரம் *(Couroupita Guianensis)* தென் அமெரிக்காவின் வட பகுதி, வெப்பவலய அமெரிக்கா, தென் கொரீபியன் பகுதிகளைத் தாயகமாகக் கொண்டது. இம் மரத்தின் உலர்ந்த பழங்கள் நச்சுத் தன்மை வாய்ந்தவை. இதன் உலர்ந்த பழங்கள் கீழே விழுந்து தரையில் பட்டு வெடித்துப் பெரும் சத்தத்தை ஏற்படுத்தும். இதன் இலைகளை அரைத்து, பூஞ்சைக் கிருமியால் தோன்றும் சொறி, சிரங்கு, படர்தாமரை, படை உள்ள இடங்களில், தடவினால் அவை குணமடையும். இதன் பூவின் லிங்கம் போன்ற பகுதியை அரைத்து புண்களின் மேல் தடவப் புண்கள் ஆறும். இதன் இலைகள் நுண்கிருமிகளை அழிக்கும் ஆற்றல் கொண்டவை. இவற்றை மென்று சாப்பிடப் பல் மற்றும் ஈறு இடைவெளியில் தங்கியுள்ள கிருமிகள் வெளியேறி பல்வலியை குறைத்து பற்கள் சொத்தையாகாமலும் காக்கும்.

| | |
|---|---|
| திணை (இராச்சியம்) | : தாவரம் |
| பிரிவு | : *Magnoliophyta* |
| வகுப்பு | : *Magnoliopsida* |
| வரிசை | : *Ericales* |
| குடும்பம் | : *Lecythidaceae* |
| பேரினம் | : *Couroupita* |
| இனம் | : *C.guianensis* |

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் சாரணர் உலகம்

# வட மாகாண சாரணர் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

வட மாகாண சாரணர் செயற்பாடுகள் மற்றும் சாரணர் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் பற்றிய கலந்துரையாடல் ஒன்று கௌரவ வட மாகாண கல்வி அமைச்சர் திரு த.குருகுலராஜா அவர்களின் தலைமையில், 2013 நொவெம்பர் 14 ஆம் திகதியன்று பி.ப 02.00 மணிக்கு வட மாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் (செம்மணிவீதி, நல்லூர்) நடைபெற்றது. இதன்போது, வட மாகாண



கல்விப்பணிப்பாளர் திரு. வை.செல்வராஜா, வட மாகாண பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். சத்தியபாலன் மற்றும் வட மாகாணத்தில் உள்ள சாரணர் மாவட்டங்களான வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், காங்கேசன்துறை ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலின்போது, வட மாகாணத்தின் சாரணர் தொடர்பாகத் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகள் தொடர்பாகவும் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டதாக அபிவிருத்தி, பொதுத் தொடர்புகள் மற்றும் ஊடகத்திற்கான உதவி மாவட்ட ஆணையாளர் வை.கேதீசன் தெரிவித்துள்ளார்.

## விரைவில்...

**சாரணர் ஆலோசகர்:** உங்கள் சாரணர் ஐயப்பாட்டைப் பூர்த்தி செய்ய உங்களிடம் உள்ள வினாக்களை அனுப்பிவைக்கலாம்.

# 21 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 2007

(சென்ற வாரத் தொடர்ச்சி)

2007 ஒகஸ்ட் முதலாம் திகதி சுவீடன் நாட்டின் மன்னர் Carl XVI Gustaf அவர்கள் சாரணர் சீருடையில் வருகை தந்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். அத்துடன், சுவீடன் நாட்டு சாரணர்கள் தயாரித்து அளித்த உணவை உண்டு மகிழ்ந்தார். மேலும் அவர், தான் 51 ஆண்டுகளாகச் சாரணர் இயக்கத்தில் இருந்து வருவதாகக் கூறினார். அன்றைய தினம் Sun Rise தினம் என அறிவிக்கப்பட்டது.








ஒவ்வொரு நாட்டிலிருந்தும் இரண்டு சாரணர்கள் வீதம் Brownsea தீவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்னர் 1907 ஒகஸ்ட் முதலாம் திகதி அன்று, பேடன் பவல் Kudu horn ஊதி உலகின் முதல் சோதனை முகாமை ஆரம்பித்து வைத்தார். அதனை மீண்டும் இருபத்தொராவது உலக சாரணர் ஜம்போரியில் இங்கிலாந்து நாட்டின் முதன்மைச் சாரணர் Peter Duncan ஊதினார். சாரணர் அனைவரும் சாரணர் வாக்குறுதியைப் புதுப்பித்துக் கொண்டனர்.

Poole Harbour இல் அமைந்துள்ள எட்டுத் தீவுகளில் Brownsea தீவு மிகப் பெரியதாகும்.



(இத்தீவு இன்று நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளது) Video Link மூலம் இருபத்தொராவது உலக சாரணர் ஜம்போரியிலிருந்த அனைவரும் இக்காட்சியைக் கண்டு பரவசமடைந்தனர்.

இருபத்தொராவது உலக சாரணர் ஜம்போரி நிகழ்ந்த 2007 ஒகஸ்ட் முதலாம் திகதி சுவிட்ஸர்லாந்து நாட்டின் தேசிய தினமாகும். அதனை சுவிஸ் சாரணர்கள் 2007 ஒகஸ்ட் 31 ஆம் திகதியன்று கொண்டாடி மகிழ்ந்தனர்.

(இதன் மிகுதி தொடரும்)

## சாரணர் இயக்க உலக அமைப்பு WOSM (World Organization of the Scout Movement)

01 ஒகஸ்ட் 1907 இல் இங்கிலாந்தில் Brownsea தீவில் பேடன் பவல் அவர்களால் முதலாவது பரிசோதனை முகாம் நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகளும் அங்கத்தவர்களது விபரங்களும்.

| நாடு | சாரணர் உறுப்பினர் | WOSM இல் சேர்ந்த ஆண்டு | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| பூட்டான் | 18,170 | 1999 | 1991 |

(தொடரும்)

தொகுப்பு: ஜனாதிபதி சாரணன் யோ.கேதீசன்
SLTS BP.A.WB(SL). IAP (India)

# மரக்கிளையில் நிழல் குடை



உப கிளைகள் பல கொண்ட 6 அடி உயரமான கிளையொன்றை வெட்டித் தரையில் நட்டுவிடுங்கள். மேல்நோக்கியவாறு இருக்கும் உப கிளைகளில் தடிகளைக் கொண்டு சில இணைப்புக்களைச் செய்த பின்னர் அவற்றின் மேலாக வைக்கோலை பரப்புங்கள் அல்லது ஓலையால் வேயவும் முடியும். இப்போது இதுவொரு நிழல் குடையாகவும் இருக்கும். சாரணர்கள் முகாம் அமைக்கையில் இவ்வாறான நிழல் குடைகளை அமைப்பது இளைப்பாறுவதற்கு வசதியாகவும் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வாசிப்பு மனிதனைப் பூரணப்படுத்தும்' என்ற விடயத்தை நீங்கள் அறிந்திருப்பீர்கள். எனினும், இன்று நம் மத்தியில் வாசிப்புப் பழக்கம் மிகவும் குறைந்துவிட்டது. அதிலும் குறிப்பாக, பாடசாலை மாணவர்களிடம் இந்தப் பழக்கம் மிகவும் குறைந்துவிட்டது என்றால் அதில் தவறில்லை.



# அறிவு வளர நூல்களை வாசிப்போம்



நேரம் கிடைக்கும்போது நூல்களை வாசிப்பதற்குப் பதிலாக, மாணவர்கள் தொலைக்காட்சி பார்த்தல், இணையத்தளத்தில் உலாவுதல், கணினி விளையாட்டுக்களில் ஈடுபடல் போன்ற விடயங்களிலேயே அதிக அக்கறை காட்டுகின்றனர். நாளாந்தம் இவ்வாறு தொலைக்காட்சி முன்பு அமர்ந்து, அதற்காக ஒரு மணித்தியாலத்தினைச் செலவிடுவீர்களாயின், அது நீங்கள் தொலைக்காட்சி பார்ப்பதற்காக வாராந்தம் 7 மணித்தியாலங்களையும் மாதாந்தம் 28 மணித்தியாலங்களையும் வீண் விரயம் செய்கின்றீர்கள் என்பதை அர்த்தப்படுத்துவதாக உள்ளது. இதன்மூலம் மாணவர்கள் தொலைக்காட்சி பார்க்கக் கூடாது என்று இங்கு அர்த்தப்படுத்துவதில்லை. மாறாக, பிரயோசனமற்ற நிகழ்ச்சிகளுக்காக நேரத்தை வீணடிப்பதைத் தவிர்த்து, தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் செய்திகள், கல்வி சார்ந்த நிகழ்ச்சிகள், அறிவை வளர்க்கும் போட்டி நிகழ்ச்சிகள் என்பனவற்றைப் பார்ப்பது சிறந்த பயனைப் பெற்றுத் தரும். ஆனால், தொலைக்காட்சி பார்ப்பதைப் பொழுதுபோக்காகக் கொள்வதைவிட, நூல்களை வாசிப்பதைப் பொழுதுபோக்காகக் கொள்வதே மிகச் சிறந்தது.

## வாசிப்பினால் கிடைக்கும் நன்மைகள் சில...

வாசிப்புப் பழக்கத்தின்மூலம் அறிவு வளர்ச்சி ஏற்படும். அத்துடன், உலகையும் உங்களையும் புரிந்துகொள்ளும் ஆற்றல் உங்களுக்குள் ஏற்படும். புத்தகம் வாசிப்பதற்காக, நேரத்தை செலவிட்டால், அதன் மூலம் நட்டமெதுவும் ஏற்படப் போவதில்லை. அறிவை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக் கிட்டும். நல்லது எது?, தீயது எது? என்று பகுத்தறிந்து செயற்படும் வாய்ப்புக் கிடைக்கும். நாகரிகமான பழக்கவழக்கங்களை எம்மில் ஏற்படுத்திக்கொள்ளலாம்.

## வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள...

புத்தகம் வாசிப்பதனை ஏன் வெறுக்கின்றீர்கள்? என்று நாம் சில மாணவ-மாணவிகளிடம் கேட்டபோது; "அது சோம்பலான ஒரு வேலை" என்ற பதிலே எமக்குக் கிடைத்தது. ஒருவரிடம் வாசிப்புப் பழக்கம் இல்லாதபோதுதான், வாசிப்பு ஒரு சோம்பலான விடயமாக அவருக்குத் தோன்றும். ஆனால், அதுவே வாசிப்புப் பழக்கத்தை நம்மிடையே ஏற்படுத்திக்கொண்டால், அந்தப் பழக்கத்தைக் கைவிடுவது சிரமமான காரியமாக மாறிவிடும். வாசிப்புப் பழக்கத்தை நம்மிடையே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் எனின், முதலில் வாசிப்பின் நன்மைகளை அறிந்துகொள்ள வேண்டும். அதன் பின்னர், பிடித்த நூல்களை வாசிப்பதற்கு ஆரம்பிக்கலாம். அதற்காக உங்களுக்குப் பிடித்த கதைப்புத்தகங்கள், செய்தித்தாள்கள், பொது அறிவு சம்பந்தமான நூல்கள் போன்றவற்றை வாசிக்க ஆரம்பிக்க வேண்டும். அப்போது, வாசிப்பின் மீது உங்களுக்கு ஆர்வம் ஏற்படும்.

வாசிப்பதனை ஒரு பழக்கமாக ஆக்கிக்கொள்ளும்வரை, உங்கள் ஓய்வு நேரத்தை வாசிப்பதற்காகப் பயன்படுத்த முடியும். சிலர் வாசிப்பில் மூழ்கினால், அதனை நிறுத்தமாட்டார்கள். ஆனால், தொடர்ச்சியாக வாசிப்பதென்பது சிலருக்கு அலுப்பான விடயமாக இருக்கும். எனவே, இப்படியானவர்கள் நாளாந்தம் ஒரு குறிப்பிட்ட நேரத்தை வாசிப்புக்காக ஒதுக்கி, வாசிக்கப் பழகுவது நன்று. பலதரப்பட்ட விடயங்கள் மற்றும் துறைகளைச் சார்ந்த நூல்களை வாசிப்பதனூடாக, வாசிப்புப் பழக்கத்தை ஓர் இனிமையான அனுபவமாக மாற்றிக்கொள்ளவும் முடியும். அத்துடன், தாய்மொழியிலான நூல்களை மட்டுமே வாசிக்காமல், வேறு மொழிகளில் உள்ள நூல்களையும் வாசியுங்கள். இதனூடாக, அந்த மொழியிலான அறிவையும் வளர்த்துக் கொள்ள முடியும்.




## வாசிப்பு நாட்குறிப்பு

நீங்கள் வாசிக்கும் ஒவ்வொரு நூலைப் பற்றி முக்கியமான விடயங்களைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். இவ்வாறு குறித்து வைக்கும் புத்தகத்தினை 'வாசிப்பு நாட்குறிப்பு' என்று கூறுவர். இந்த நாட்குறிப்பில் நீங்கள் வாசித்த நூலின் பெயர், அதனை எழுதிய எழுத்தாளரின் பெயர், அதில் உள்ளடங்கியுள்ள முக்கிய விடயங்கள், ஆண்டுகள், நீங்கள் அறிந்திராத புதிய விடயங்கள் என்பனவற்றைக் குறித்துக்கொள்ளுங்கள். இவ்வாறு நீங்கள் குறித்துக் கொள்வதால், பல நன்மைகள் உண்டு: அதாவது, ஒரே நூலைப் பலமுறை வாசிப்பது தவிர்க்கப்படும். வருட இறுதியில் எத்தனை நூல்களை வாசித்திருக்கின்றீர்கள்? என்று ஒரு மதிப்பீட்டை மேற்கொள்ள முடியும். உங்களுக்கு ஏதாவதொரு முக்கியமான விடயம் குறித்த தகவல்கள் தேவையெனில், இந்த நாட்குறிப்பினூடாக அத்தகவலைப் பெற முடியும். பழைய நூல்களையும் புதிதாக வெளிவரும் நூல்களையும் உங்களால் சேகரிக்க முடியும்.

## வாசிப்பதற்கு உகந்ததைத் தெரிவு செய்தல்

சிறுவர்களுக்கு என்று எழுதப்பட்ட நூல்கள் பல உள்ளன. நூல்கள் பற்றி எழுதப்பட்ட விமர்சனங்கள் மற்றும் நூலில் உள்ள அறிமுகம் மற்றும் உள்ளடக்கம் என்பனவற்றை வாசித்து, பொருத்தமான நூல்களைத் தெரிவு செய்ய முடியும். நூல்களைத் தவிர, நாளாந்த-வாராந்த செய்திப் பத்திரிகைகளை வாசிப்பதும் அவசியமாகும். (இ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டுதோறும் நீரில் மூழ்கும் வெனிஸ் நகரம்





ஐரோப்பாவிலுள்ள வெனிஸ் நகரம் உலகப் புகழ்பெற்ற ஒரு நகரமாகும். இதன் சிறப்பம்சம் என்னவென்றால், இந்நகர் நீரால் சூழப்பட்டிருக்கின்றமையாகும். தற்போது இந்த நகரைப் பற்றிய ஒரு தகவல் மேலும் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது.

அதாவது, மேற்படி வெனிஸ் நகரமானது, நாளுக்கு நாள் நீரில் மூழ்கிக்கொண்டிருப்பதான செய்தியே அதுவாகும். நவீன செயற்கைக் கோள்களின் துணைகொண்டு, விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வுகளின்மூலமே இந்த உண்மை தெரிய வந்துள்ளது. அதற்கமைய வெனிஸ் நகரமானது, ஆண்டுதோறும் 2 தொடக்கம் 10 மில்லிமீற்றர் வரை, நீரில் மூழ்கிப் பின்னர் பழைய நிலைக்கு மீளுகின்றபோதிலும், 0.8 தொடக்கம் 1 மில்லிமீற்றர் வரையிலான நிலப்பகுதியை நிரந்தரமாகக் கடலுக்கு இரையாக்கிவிட்டே மீள்கின்றதாம்.

இதுகுறித்த ஆராய்ச்சிகளை மேற்கொண்ட விஞ்ஞானிகள், இரண்டு சந்தர்ப்பங்களிலும் (அதாவது நிலப்பகுதி நீரில் மூழ்கும் போதும், பின்னர் மீளும்போதும்) நிகழ்கின்ற அளவீடுகளை நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

இதிலுள்ள விசேடம் என்னவென்றால், ஆண்டுக்கு நான்கு தடவைகளுக்கு, இவ்வாறு இந்த நிலமட்டமானது, நீரில் மூழ்கி மீளுகின்றதாகவும், அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிலப்பகுதியில் குறித்தளவு பகுதியை இழந்துகொண்டே மீளுகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, அருகிலுள்ள கடலின் மட்டம் உயருகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பமும் வெனிஸ் நகரிற்கு ஆபத்தாகவே அமைவதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். ஆகையால், தொடர்ச்சியாக இதுகுறித்தான அவதானிப்பு அத்தியாவசியமாகும் என்று இத்தாலியின் 'படுவா' பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளரான பியட்ரோ டீட்னி என்பவர் தெரிவித்துள்ளார்.

நீரில் மூழ்குகின்ற வெனிஸின் நிலப்பகுதியானது, அதிலிருந்து மீளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், குறித்தளவு பகுதி, நீரில் நிரந்தரமாக மூழ்கிவிடுவதைக் கடந்த பத்து வருடங்களுக்கு முன்னர் விஞ்ஞானிகள் உணர்த்தியிருந்தனர். எனினும், அதுகுறித்துக் கூடிய அக்கறை செலுத்தப்படாத நிலையில், தற்போது 'செயற்கை கோள்' களின் உதவியுடன் ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடிந்துள்ளமையால், இதிலுள்ள ஆபத்தின் தன்மை தற்போது உணரப்பட்டுள்ளது. எனவே, வெனிஸ் நகரத்தை இந்த ஆபத்திலிருந்து பாதுகாப்பதற்கான வழிவகைகள் எவை? என்ற ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, நொவெம்பர் மாதம் 27 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday November 27, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org